temple and with feelings of extreme love towards his teacher and with tears of joy. After the tower was lost to view, he turned, visited and worshipped on the way such sacred places of Siva as Srivanchiam etc. He reached Mayavaram, bathed in the river Cauveri, finished his daily ablutions, went into the Siva temple, visited and worshipped Mayooranathar and Anjalnayaki. He, then, took leave of them, arrived at Dharmapuram, situate in the eastern direction and worshipped Dharmapureeswarar (the presiding deity at Dharmapuram) and Abayambikai and took his abode at a hermitage in Vilvaranyam (jungle of Bel trees) lying to the west of the temple there. Worshipping Lord Chockalinga he imparted spiritual illumination to competent devotees that came to him. taught them **Sivagnana Siddhiar** (a commentary on the celebrated work **Sivagnanabodham**), cleared all doubts and perversities, performed the Jnanayaga by means of hearing, meditation, clarified views and attainment of Nishta (completion of religious duties etc.,) initiated the state of Suddhadvaitha Saiva Siddhanta Samarasa Sanmarga to all sentient beings, from creatures of one sense to Devas having six senses, protected them by blessing them with **Nithyananda Mukti** (perpetual and eternal bliss), remained as the supreme spiritual preceptor and as the head of **Meykanda Santana Desika Peetam**, became the author of many works of Jnana (true knowledge) such as *Sivaboga Saram,*' *Mukti Nischayam, Perananda Siddhiar* etc., as well as many other devotional works and hymns, proved the Divine grace by many miraculous deeds and lived for many years as the religious head of the world.

The great saints, who were the disciples of Agastya and who were previously attending to the daily and periodical festivals of Dharmapureeswarar at Dharmapuram, were immensely pleased to note these glorious acts of Jnana-

sambandhar, entrusted their hermitage and the Siva temple to him, taught him various miraculous powers, such as alchemy, for the proper administration of the said trusts and blessed him saying, "Like us, you and your successors shall look after and manage the aforesaid hermitage and Siva temple hereditarily." Then they reached their abode "The Divine Kailas."

Jnanasambandha Desikhar therefore looked after the temple from that time and protected the holy crowd of Saivite devotees, out of his abundant grace, and conducted the renovation of the Siva temple, festivals etc., without counting upon anybody. Then he learnt through Divine inspiration that his Paripurana stage (ultimate stage) was approaching. Thereupon, he constructed a temple to the west of the Siva temple, installed a Sivalinga (image of Siva) therein and wanted to sit in Samadhi (Yogic contemplation) near the sacred feet of the said Sivalinga Peruman. Then he imparted Jnana (knowledge) to Anandaparavasar, the most intelligent of all his disciples, gave him his seat and the image of Chockalinga and ordered "In future you shall occupy my seat, impart spiritual knowledge and live long protecting competent men and safeguarding Chockalingam and Siva temple." So saying he sat in Siva Samadhi (Yogic contemplation). Anandaparavasa Desikhar who was already on the verge of attaining salvation fell before the Samadhi with tears of joy, rose up, went to the western side of the Samadhi of his spiritual instructor, remained facing east, looking at the top of the temple of his spiritual teacher, sat in Samadhi (Yogic contemplation) and attained the eternal bliss of **Sivanandadvaita.**

The holy crowd of devotees who came to know of this, became very anxious, went before Guru Jnanasambandha Murti who had already attained the Paripurna stage, reported to him about Anandaparavasa Desikhar having immediately sat

in Yogic contemplation and attained salvation and prayed to him and requested him as follows:—"You should come out again, appoint another person, preserve the hereditary tradition and protect us." Guru Jnanasambandha, on hearing them, came out from the Samadhi (Supreme state) selected Sachidanandar who was somewhat slow of comprehension among his disciples, initiated him into knowledge by his sacred sight, and delivered to him his seat and Chockalinga; however, as the latter did not attain the stage of Jnana Samadhi, the former saw the said Sachidananda Desikhar with Divine grace and addressed him as follows in the form of a stanza:—"Although you saw Anandaparavasar, who has no beginning, end or middle, and who has got the threefold-attributes of the Supreme spirit, *viz.*, existence, knowledge and bliss, it is a great pity that you have not found the way to bliss. We are unable to give the reason. Perhaps you are troubled by self-respect. Probably you have not got rid of the three evil passions, pride, lust and delusion; nor has wisdom dawned in your mind. Please inform us of the cause of your confusion." Immediately Sachidananda attained the stage of Siva Samadhi. Rejoiced at this Guru Jnanasambandha Desikhar spoke as follows:—"In future you shall occupy my seat, worship Chockalingam, love the holy crowd of disciples and devotees, protect them and live long imparting Siva Jnana to competent men." So saying, he sat in Siva Samadhi (Yogic contemplation of Siva) and attained eternal bliss on the seventh day of the dark fortnight in the month of Vaikasi.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரவாதீன மடாலய
ஸ்தாபகராகிய

# ஸ்ரீமத் குருஞானசம்பந்த தேசிகர்
# சரித்திரசார சங்கிரகம்

---

## குருபரம்பரை வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

நன்னா ருடன்செயும் பாமாலை சூடுநன் னாவலரைப்
பன்னாத பேரின்ப வீடாளச் செய்யும் பதாம்புயனே
யென்னாக மாவி பொருண்மூன்று மேற்றெனக் கின்பருள்வாய்
தென்னா தருமைச் சிவஞான சம்பந்த தேசிகனே !

## நூல்

பூவுலகினுந் தேவுலகமாய் விளங்காநின்ற இப்பூவுலகின் கண்ணே, மிகச் சிறப்புற்றோங்கிய நவகண்டங்களி னுள்ளுந் தவகண்டமாகிய பரதகண்டத்திலே, சிவபூமி யாய் விளங்கி யோங்குஞ் செந்தமிழ்நாட்டிலே, தென்னு டாகிய பாண்டிவளநாட்டின்கண் சிறந்த நிலவளமும் நீர் வளமும் பொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூரின்கண்ணே, சுமார் நானூறு வருடங்களுக்கு முன்னரே, சிறப்புற்ற கார்காத்த சைவ வேளாளர் குலத்திலே, சிவநேசச் செல்வமிகுந்த சுப்பிரமணியபிள்ளை யென்பவர் செய்த சிவபூஜாபுண்ணிய பலமேலீட்டினாலே அவர் மனைவியாராகிய கற்பிற்சிறந்த மீனாக்ஷியம்மையாரிடத்திலே, கருணாநிதியாகிய ஸ்ரீ சிவ பெருமான் இத் தமிழ்நாட்டின்கண்ணே, மாயாவாதம், சமவாதம் முதலிய புறமதங்கள் தலையெடுத்துத் தம் சைவசமயத்தையும் தம்மடியார்களையும் நிந்தித்துப் பல விதமான இடையூறு செய்துலாவி மிகுதலை, வேதாகமப் பிரமாணங்களாற் கண்டித்துச் சைவ சமய ஸ்தாபனமுஞ் சிவஞானோபதேசமுஞ் செய்தருளிச் சிவனடியார்களை யாண்டருளத் திருவுளங்கொண்டு, திருவருளே திருமே னியா யுற்று மங்கள சுபமுகூர்த்தங்கள் நிறைந்த சோம வாரதினத்திலே, திருவவதாரஞ் செய்தருளி மூன்றாம் பாலமதிபோல் ஒவ்வொருநாளுந் திருமேனியுஞ் சிவ ஞானமும் மேன்மேலும் வளர வளர்ந்துவந்த காரணத் தால், தாய் தந்தையர்கள் களிப்புற்று ஞானசம்பந்தன் என்னுந் திருநாமமிட்டழைக்கப்பெற்றுப் பதினாறுமாண் டுக்குள் தென்மொழி வடமொழிக ளிரண்டினு மிக வல்ல ராய், ஆகம சாஸ்திரங்களெல்லாம் தமது குலகுருமூல மாய் விரைவில் ஓதி யுணர்ந்து, சிவஞானச் செல்வராய்

விளங்கித் தமது தாய்தந்தையர்கள் கண்டு களித்து ஆனந்தவாரிதியில் மூழ்கி மகிழும்வண்ணம் வாழ்ந்து கொண்டிருந்தாராயினர்.

இவ்வாறிருந்து வருங்காலத்தில், ஒருநாள் ஞானசம்பந்தருடைய தாய்தந்தையர்கள், தங்களுடைய ஆத்மார்த்த மூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்க விரும்பி, மதுரைக்குப் புறப்படுங் காலையில், தமது அருமைப் புதல்வராகிய ஞானசம்பந்தரையுங் கூட்டிவழைத்துக்கொண்டுபோய்ச் சோமசுந்தரக் கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையுந் தரிசித்துக்கொண்டு சிலநா ளங்கேயே தங்கியிருந்து, தங்களூருக்குத் திரும்புகையிற் றம்புதல்வராகிய ஞானசம்பந்தரையு மழைக்க, அவர் அத் தாய்தந்தையர்களைப் பார்த்து, 'என் தாய்தந்தையர்க ளிவ்வாலயத்தின்கண்ணே யிருக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து பொய்யா யழிந்தொழியும் உங்களுடன் வரேன்.' என்று பல சாஸ்திர வாயிலாகச் சமாதானஞ் சொல்ல, அவர்கள் ஒருவாறு மனமகிழ்ந்து, மதுரையிலேயே அவரிஷ்டம் போலிருக்குமாறு விட்டுப்போயினர்.

பின்பு ஞானசம்பந்தர் தினந்தோறும் பொற்றாமரைத் தடாகத்தில் ஸ்நாநாநுஷ்டானங்களாகிய நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, ஆறுகாலமுஞ் சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் தரிசித்து வணங்கித் துதித்துப் பலநாள் வசித்துக்கொண்டு வருகையில், அன்பு மேலீட்டினாலே சோமசுந்தரக்கடவுள் மீது 'சொக்கநாத வெண்பா' என்னும் ஒரு பாமாலை பாடிச் சாத்தி, இன்னருள்பெற் றிருந்துவருநாளில், ஒருநாள் பொற்றாமரைத் தடாகக்கரையிற் சில சிவனடியார்கள் நெருங்கியிருந்து சிவபூசைசெய்து ஆனந்தக்கண்ணீர் விட்டுத் தோத்திரஞ்செய்தலைக் கண்ணுற்றுத் தாமும்

அவ்வாறு சிவபூசைசெய் தானந்தமுற விரும்பிச் சோமசுந்தரக்கடவுள் முன்னிலையிற் சென்று நின்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டவண்ணமே, தம்மிருக்கை சேர்ந்து அன்றிரவில் நித்திரை செய்ய, கனவின்கண் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளிவந்து காட்சிகொடுத்தருளி, 'ஞான சம்பந்தா! நாம் சிவலிங்க ரூபமாகப் பொற்றாமரைத்தடாகத்தின் ஈசானமூலையில் கங்கைக்குள்ளிருக்கின்றோம். காலையி லங்குச்சென்று மூழ்கி யெடுத்து உன்னிஷ்டப்படி பூசிப்பாயாக!' என்று கட்டளையிட்டுத் திருவுருமறைந்தருளலுந் திடுக்கிட்டெழுந்து விழித் ததிசயமுற்று, ஆனந்தக்கூத்தாடித் தோத்திரித்த வண்ணமே, அதிகாலையில் பொற்றாமரைத் தீர்த்தத்திற் சென்று கட்டளைப்பிரகாரம் மூழ்கிப் பார்க்குங்கால், தானே பெட்டகக் கோயிலோடுந் தங் கையில்வந்தெழுந்தருளிய சிவலிங்கத்தை யெடுத்துப் பூசித்து, ஆனந்தக்கூத்தாடிக் கொண்டு சந்நிதானத்தில் சென்று, சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்கி,

கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடு மற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட வென்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே.

என்னும் சோக்கநாதக் கலித்துறையைப்பாடி, 'அடியேன் விரும்பியவண்ணங் கிருபைசெய்தருளினீர்; இனி, இச்சிவலிங்கத்தைப் பூசித்துய்தற்கேதுவாகிய சிவஞானோபதேசமுஞ் செய்தருளுஞ் சிவாசாரியரையும் அனுக்கிரகித்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்து விடைபெற்றுக் கொண்டு, தம்மிருக்கையிற் சார்ந்து அன்றிரவில் நித்திரை செய்கையில், முன்போல் சோமசுந்தரக்கடவுள் எழுந்

தருளிவந்து காட்சி கொடுத்தருளி, 'ஞானசம்பந்தா! திருவாரூரின்கண் சென்று நமதுபதேச சாம்பிரதாய பரம்பரையில் வந்த ஞானப்பிரகாச தேசிகனிடத்தில் ஞானோபதேசம் பெற்று, நம்மைப் பூசித்து வாழ்வாயாக!' என்று கட்டளையிட்டருளி மறைந்து திருவாரூரில் ஞானப்பிரகாச தேசிகரிடத்திற் சென்று, கனவிற் றோன்றி, 'ஞானப்பிரகாசனே! வருகிற சோமவாரத் தன்று உன்னிடம் வருகிற நமது ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசஞ் செய்து, சிவலிங்க பூசையும் எழுந்தருளப் பண்ணிவைப்பாயாக!' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

உடனே ஞானப்பிரகாச தேசிகர் சோமசுந்தரக் கடவுள் தம்மேற் கருணைகூர்ந்து எழுந்தருளிவந்து கனவிற் கட்டளையிட்டருளியதைச் சிரமேற்கொண்டு வணங்கித் திடுக்கிட்டெழுந்து மெய்சிலிர்த் தானந்தக் கண்ணீர் பொழியத் தோத்திரித்து வணங்கி, கட்டளையிட்டருளியசோமவாரதினத்தை எதிர்பார்த்திருந்தனர்.

அச்சோமவார தினத்தில் அதிகாலையி லெழுந்து கமலாலயத்தில் ஸ்நானஞ்செய்து, நித்திய கர்மானுஷ்டான சிவ பூஜாதிகளை முடித்துக்கொண்டு, சிவலாயத்திற் சென்று, தியாகராஜப் பெருமானைத் தரிசித்து, சித்தீச்சரத்திலுள்ள தமதுபாசனா மூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பகவானுக்கு, விசேஷ அபிஷேக நைவேத்திய தீபாராதனைகளுஞ் செய்வித்து, அச்சந்நிதானத்திற் கிழக்கு முகமாய் வீற்றிருந்து, ஞான சம்பந்தர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவர் இவ்வாறிருக்க;

மதுரைமாநகரத்தில் ஞானசம்பந்தர் தமக்குக் கனவின்கண் சோமசுந்தரக்கடவுள் கட்டளையிட்டருளிய

தைக் கேட்டுத் திடுக்கென நித்திரைவிட் டெழுந்து, மெய்சிலிர்த்து, ஆனந்தபாஷ்பம் பொழியத் தோத்திரித்து வணங்கி, அதிகாலையி லெழுந்து, சிவாலயத்திற் சென்று, பொற்றாமரைத் தடாகத்தின்மூழ்கி, நித்திய கர்மானுஷ்டானம் சிவபூஜாதிகளை முடித்துக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளையும், மீனாக்ஷியம்மையாரையுந் தரிசித்து வணங்கிப் புறவிடைபெற்று, அங்கு நின்றும் புறப்பட்டு மத்தியிலுள்ள திருவானைக்கா முதலிய சிவஸ்தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு அச் சோமவார தினத்தில் அதிகாலையிற் றிருவாரூரை யடைந்து, கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிவாலயத்திற்புகுந்து, பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து, விநாயகரைத் தரிசித்து வணங்கிச் சந்நிதானத்திற் புகுங்காற் றம்மை யறியாமல் ஆனந்தக் கண்ணீர் சொரிய, மெய்சிலிர்க்க, நாத் தழுதழுக்க, நடை தள்ளாடச் சென்று, திருமூலட்டானேசுரரையும், தியாகராஜப் பெருமானையும் வணங்கித் துதித்து, நீலோத்பலாம்பிகையையும் தரிசித்து வணங்கிக் குருநாதன் றரிசனம் எப்போது கிடைக்குமோ வென்று நினைத்து விரைவாய்ப் பிரதக்ஷணம் வருகையில், எதிரே யுள்ள சித்தீச்சரத்தின்கண் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில், அத்தக்ஷிணாமூர்த்திபகவானே தம்மையாண்டருள வேண்டுமென்னும் பெருங் கருணையினாலே, மானிடவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றாரென் றறிவுறக் கிழக்கு முகமாய்ப் பெருங்கருணையோடும் ஈனமல விருணீக்கி யருளும் ஞானபானுவேயென வீற்றிராநின்ற குருமூர்த்தியாகிய ஞானப்பிரகாசதேசிகரைக் கண்டவுடன் றம்மிறைவன் உணர்த்தியருளிய ஞானப்பிரகாச தேசிகரிவரே என்றுதெளிந்து காந்தங்கண்ட இரும்புபோல் விரைவிற்

சென்று, திருவடிகளில் வீழ்ந்து, ஆனந்தபரவசராயினார்.

அஃதுணர்ந்த ஞானப்பிரகாச தேசிகர் மிகுந்த பேரன்போடும் ஞானசம்பந்தரைத் தம்மிருகரங்களால் எடுத்துச்சிமோந்து சயித்தியோபசாரஞ்செய்து, 'ஞானசம்பந்தா' என்று தட்டியெழுப்பிப் 'பயப்படாதே' யென்று அபயங் கொடுத்து, சந்நிதானத்தில் வடக்கு முகமா யுட்காரவைத்துத், திருவருணோக்கத்தால் ஞானதீக்கை செய்து, மெய்யாதி முப்பொருளுங்கொண்டு ஐயாதி முப்பொருளும் விண்டு, (பதி பசு பாசம்) அவர் சிரமேற் றிருவடிக்கமலஞ் சூட்டி, முத்தி பஞ்சாக்ஷரத்தாற் சிவஞானோபதேசமுஞ் செய்து, சிவத்தோ டைக்கியமாம் அத்துவிதாநந்த நிலயமாகிய நித்தியானந்த வீடருளிச் சொக்கலிங்கத்தை யெழுந்தருளப்பண்ணித் திருக்கரத்திற் கொடுத்தருளினார்.

உடனே, அச்சொக்கலிங்கத்தினை ஞான பூஜா விதிப்படிப் பூசித்து, தாம் சோக்கநாதக் கலித்துறையைப்பாடித் துதித்துப் பிரார்த்தித்து, தம் குருநாதனாகிய ஞானப்பிரகாச தேசிகரை "அருவுமுருவுமருவுருவுமில்லா ஆண்டான்" என்னும் வெண்பாக்களாற் பலவாறு தோத்திரித்துக்கொண்டு, திருவடிகளில் வீழ்ந்து, பேரானந்தக் கண்ணீராட்டிப் பூசித்து நிற்க, ஞானப்பிரகாசதேசிகர் புன்னகைபுரிந்து திருவருளோடுஞ் சிவபிரான் திருநந்திதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய சிவஞானபோதமாபாடியமாகிய சிவஞான சித்தியாரை யையந்திரிபற உணர்த்தியருளினார்.

இவ்வாறு திருவாரூரில் ஞானப்பிரகாச தேசிகரிடத்து, ஞானோபதேசம் பெற்றருளிய ஞானசம்பந்தர்,

சொக்கலிங்க மூர்த்தியை ஞானபூஜா விதிப்படிப் பூசித்து, சிவஞானசித்தியைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிப் பலநாள் குருக்ஷேத்திர வாசஞ்செய்து கொண்டு, குருபணிவிடையை நிழல்போற் பிரியா தியற்றிக்கொண்டு வருநாளில், ஒருநாள் தம்மைப்போன்ற பல சீடர்கள் சூழக் குருமூர்த்தியோடு கோயிலுக்குப் போய் அர்த்தசாம தரிசனஞ்செய்து திரும்பிவருகையிற் கைவிளக்குப் பணிவிடைக்காரன் றூங்கிவிட்டமையால் ஞானசம்பந்தர் தாமே விரைவிற் சென்று கைவிளக்கை யெடுத்துக்கொண்டு, இன்று இப்பணிவிடை நமக்குக் கிடைத்ததே யென்று பெருமகிழ்ச்சியாய்க் குருநாதனுக்கு முன்செல்ல, மடத்துக்குள் ஞானப்பிரகாச தேசிகர் புகுங்கால், ஞானசம்பந்தரை நிற்க வென்று கட்டளை யிட்டருளிச் சென்று, போஜன முதலியனவுஞ் செய்து நித்திரை செய்தருளினார்.

ஞானசம்பந்தரும் அக் குருமூர்த்தியின் வாக்கின் பிரகாரம் கைவிளக்கைப் பிடித்தவண்ணமே தமக்குபதேசித்தருளிய சிவஞானோபதேச நிலையிலேயே விடியும் வரையும் நின்றருளினார். திருவருளினா லன்றிரவு பெய்த விடாமழைகள் அவர் திருமேனியில் விழாது, ஒரு கஜ தூரம்வரையும் சுற்றிலும் கோடுகட்டினதுபோல், கீழ்ப் பூமியிலும் சலம்புகாமல் நின்றன. இவ்வாறிருந்ததை, விடியற்காலத்திற் சாணந்தெளிக்கவந்த பெண்கள் கண்டு, மனம் அதிசயித்து உள்ளே திரும்பியோடி ஞானப் பிரகாசதேசிகருக்குத் தெரிவிக்க, அவர் உடனே திடுக்கிட்டெழுந்து ஓடிவந்து பார்த்துத் திருவருளின் மகிமையைச் சிந்தித்து, ஆனந்தக்கண்ணீர் சோர, 'எனது குரு ஞானசம்பந்தா' வென்று கூப்பிட்டுக்கொண்டு, சமீபத்திற் சென்று, தமதிருகரங்களாலும் ஞானசம்பந்த தேசி

கரை யிறுகப் புல்லிக்கொண்டு, 'அப்பனே! நீர் நாமும் வணங்குங் குருராயராகிவிட்டீர்' என்று பேரன்போடு முரைத்து, 'இனி நீர் இஷ்டப் பிரகாரம் வேண்டிய விடத்திற் சென்றிருந்துகொண்டு, உம்மை வந்தடைந்த பக்குவர்களுக்குச் சிவஞானோபதேசஞ் செய்து பாது காத்து, மடாதிபதியாக வாழக்கடவீர்' என்று கட்டளை யிட்டருள, ஞானசம்பந்த தேசிகர் இடியினைக் கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டுக் கீழே விழுந்து புரண்டு அழுது, 'அடியே னெவ்வாறு தேவரீரை விட்டுப் பிரிந்திருப் பேன்?' என்று பலவாறு புலம்பிக்கொண்டு நின்று 'அடியேனுக்குஞ் சுதந்தரமுண்டோ?' என்று சொல்லி,

கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
வெனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச சிதம்பரவின்
றனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே.

என்னுங் கட்டளைக்கலித்துறையாற் றம்முடைய கருத் தைத் தெரிவிக்கக் கேட்டருளிய ஞானப்பிரகாச தேசி கர், பேரன்போடு மனமகிழ்ந்து 'ஞானசம்பந்தரே! நமதூருக்கு வடக்கே இரண்டு யோசனை தூரத்துக் கப்பாலுள்ள மாயூரத்துக்குக் கிழக்குத் திக்கில் ஒரு குரோச தூரத்துக்குள், எமதருமராஜனாற் பூசிக்கப் பெற்று, அகஸ்திய முனிவர் முதலிய மகான்களாற் றரிசித்து வணங்கப்பெற்ற வில்வாரண்யமாகிய தரும புரத்திற் சென்று வசித்து, உமது பக்கல் வந்தடைந்த பக்குவிகளுக்கு ஞானோபதேசஞ் செய்து போலியாகிய புறமதங்களை வேதாகம முதலிய பாசுபதாஸ்திரங்களால் வென்று, சைவசமய ஸ்தாபனஞ்செய்து, சைவசித்தாந்த சமரச சன்மார்க்க சமயபரிபாலன பீடாதிபதியாய்

வாழக் கடவாய்!' என்று கட்டளையிட் டருளியபடியே, புறவிடை பெற்றுக்கொண்டு பிரிவாற்றாராய்ப் புறங்காட்டாது, கோபுரத்தைத் தரிசித்த வண்ணம் குருமூர்த்தி மேற் பேரன்போடும், ஆனந்தக் கண்ணீர் சொரிய ஞானப்ரகாச மாலையைப் பாடிக்கொண்டு சென்று, கோபுர மறைந்தபிறகு திரும்பி, மத்தியிலுள்ள ஸ்ரீ வாஞ்சிய முதலிய சிவஸ்தலங்களை யெல்லாந் தரிசித்து வணங்கிக்கொண்டு, மாயூரத்தை யடைந்து, காவேரியில் ஸ்நானஞ் செய்து நித்யகர்மானுஷ்டான முதலியவைகளை முடித்துக்கொண்டு, சிவாலயத்துட் சென்று, மாயூர நாதரையும் அஞ்சனாயகியையும் தரிசித்து வணங்கி விடை பெற்றுக் கிழக்குத் திக்கிலுள்ள தருமபுரத்தை யடைந்து தருமபுரீஸ்வரரையும் அபயாம்பிகையையும் தரிசித்து வணங்கி, அக்கோவிலின் மேற்புறத்திலுள்ள வில்வாரண்ணியத்தில் ஓராசிரமத்துள் வசித்து, சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துக்கொண்டு, தம்மை யடைந்த பக்குவர்களுக்கு ஞானதீக்கை புரிந்து ஞானோபதேசஞ் செய்து, சிவஞான சித்தியாரை ஐயந்திரிபற வுணர்த்தி, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் முதலியவைகளால் ஞானயாகஞ் செய்து, ஓரறிவுயிராகிய தாபரமுதல் ஆறறிவுயிராகிய தேவரீறாய சகல உயிர்களுக்குஞ் சுத்தாத்வைத சைவசித்தாந்த சமரச சன்மார்க்க நிலையினை யுபதேசித்து நித்தியானந்த முத்தியை யீந்தருளிப் பாதுகாத்து, குருராய தேசிகமணியாய் மெய்கண்டசந்தான தேசிகபீடாதிபதியாய் எழுந்தருளி யிருந்து, சிவபோகசாரம், முத்திநிச்சயம், பேரானந்த சித்தியார் முதலிய உண்மை நூல்களாகிய ஞானசாத்திரங்களையும், அநேக தோத்திரங்களையுஞ் செய்தருளி, அநேக அற்புதங்களால் திருவருளை விளக்கிக் கொண்டு, ஜெகத்

குருவாய் விளங்கி அநேகவருடகாலம் எழுந்தருளி யிருந்தனர்.

அவ்வா றிருக்கையில், அத் தருமபுரத்திலுள்ள தருமபுரீசுரருக்கு, நித்திய நைமித்திய முதலியவைகளை நடாத்திக்கொண்டு வந்த அகஸ்தியருடைய மாணுக்கர்களாகிய முனீந்திரர்கள் இஞ் ஞானசம்பந்த தேசிகரது பிரபாவ முதலியவைகளைக் கண்ணுற்றுப் பேரானந்தமுற்றவர்களாய்த் தங்களுடைய ஆசிரமங்களையும் சிவாலயத்தையும் அவரிடம் ஒப்புவித்து, அவைகளைப் பரிபாலித்து வரத்தகுந்த இரசவாத முதலிய பல சித்திகளையும் உபதேசித்து, 'எங்களைப்போல் மேற்கூறிய ஆச்சிரமத்தையும், சிவாலயத்தையும் பாதுகாத்து, நீரும் உமக்குப் பின்வரும் சந்ததியாரும் பரம்பரையாய்ப் பரிபாலித்து வரக்கடவீர்கள்' என்று ஆசீர்வதித்து, தங்களுடைய ஸ்தானமாகிய திருக்கயிலாயத்தை யடைந்தருளிஞர்கள்.

அதன்பிறகு, ஞானசம்பந்ததேசிகர் சிவாலயத்தையும் சிவனடியார்களாகிய திருக் கூட்டங்களையும், தமது பெருங்கருணையினுற் பாதுகாத்துக்கொண்டு, ஒருவரையும் எதிர்பாராது சிவாலயத்திருப்பணி மகோற்சவம் முதலியவைகளை நடாத்திக்கொண்டு வருகையில், தமக்குச் சமீபத்தில் பரிபூரணதசை வருதலைத் திருவருளுணர்த்த வுணர்ந்து, சிவாலயத்துக்கு மேற்கே திருக்கோயில்கட்டிச், சிவலிங்கப் பிரதிட்டைசெய்து, அச்சிவலிங்கப் பெருமான் றிருவடி நீழலிற் சமாதிகூடத் திருவுளங் கொண்டு, தமதடியார்களில் அதிதீவிர பக்குவராகிய ஆநந்தபரவசருக்கு ஞானேபதேசஞ் செய்து, தமது பீடாதிபத்தியத்தையும் சொக்கலிங்கத்தையுங் கொடுத்தருளி, 'இனி, நீர் நமது பீடத்திலிருந்துகொண்டு, ஞானேபதேசஞ் செய்து, பக்குவர்களையுஞ் சொக்கலிங்கத்தையும் சிவாலயத்தையும்

பரிபாலித்து வாழ்ந்துவரக்கடவீர்' என்று கட்டளையிட்டருளி, சிவசமாதி கூடியருளலும், ஆனந்தபரவசதேசிகர் அதிதீவிர பக்குவரானபடியால் சிவஞான மேலீட்டினால், ஆனந்த பாஷ்பம் பொழியச் சமாதி முன்னிலையில் வீழ்ந்து, நமஸ்கரித்து எழுந்து, ஞானாசாரியருடைய சமாதியின் மேற்புறத்திற் சென்று, குருமூர்த்தியின் திருக்கோயிற் சிகரத்தைத் தரிசித்தவண்ணம் கிழக்கு முகமாயிருந்து, சமாதிகூடி மீளாச் சிவானந்தாத்வைத முத்திநிலை யெய்தியருளினார்.

அஃதுணர்ந்த திருக்கூட்டத்தார்களாகிய மெய்யடியார்கள் கவலை யுற்றவர்களாய், பரிபூரண தசையை யடைந்த குருஞானசம்பந்தமூர்த்தி சந்நிதானத்தை யடைந்து, ஆனந்தபரவசதேசிகர் உடனே சமாதிகூடி முத்தியடைந்த நிலையினைத் தெரிவித்து, 'சுவாமிகள் மீளவும் எழுந்தருளிவந்து, வேறொருவரை நியமித்துப் பரம்பரைச் சம்பிரதாயத்தையும், அடியேங்களையும் இரக்ஷித்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளத் திருவுள்ளத்துத் திருவருளாலுணர்ந்து, மீளவுஞ் சமாதியினின்று மெழுந்தருளிவந்து தம்மடியார்களில் மந்தபக்குவராகிய சச்சிதானந்தர் என்பவரைத் தெரிந்தெடுத்துத் தமது திருநோக்கத்தால் ஞானாபிஷேகஞ்செய்து, தமது பீடாதிபத்தியத்தையுஞ் சொக்கலிங்கத்தையுங் கொடுத்தருளியும், ஞானசமாதி கூடிவராமையால் அச் சச்சிதானந்த தேசிகரைத் திருவருணோக்கஞ் செய்து,

தானந்த மாதிநடு வில்லா தோங்குஞ்
சச்சிதா னந்தமயந் தானே யாய
வானந்த பரவசனைக் கண்டுங் கண்டு
மந்தந்தோ பரகதியை யறிந்தீ ரில்லை

மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ?
மலமாயை கன்மமிவை மடியா தாலோ?
ஞானந்தா னுமதுளத்தி லுதியா தாலோ?
நாமறியோ முமதுமய னவிற்று வீரே.

என்ற திருவருட்பாடலைத் திருவாய் மலர்ந்தருளலும், சிவசமாதி நிலையினைக் கூடியுணர்ந்தனர். அஃதுணர்ந்து மகிழ்ந்தருளிய குருஞானசம்பந்த தேசிகர் அச் சச்சிதானந்ததேசிகரைப் பார்த்து, 'இனி, நீர் நமது பீடாதிபதியாய் வீற்றிருந்துகொண்டு, சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துத் திருக்கூட்டத்துள்ள அடியார்களை நேசித்து, பக்தர்களை விசுவாசித்துப் பாதுகாத்துப், பக்குவிகளுக்குச் சிவஞானோபதேசஞ்செய்து நீடூழி வாழ்ந்துவரக்கடவீர்' என்று கட்டளை யிட்டருளி, வைகாசிமாசம் அமர பக்க சப்தமி தினத்திலே, சிவசமாதிகூடிச் சிவானந்தாத்வைத பரிபூரணநிலையாகிய, தத்சொரூப சித்தியினை யெய்தியருளினார்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர் சரித்திரசாரசங்கிரகம் முற்றிற்று.

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகன் றிருவடி வாழ்க.

# பொருளடக்கம்


Foreword to the Second Edition ... Page 5
Foreword to the First Edition ... 9
Introduction ... 11
Notes on "Saiva Siddhanta" ... 17
Stanzas from Mukti Nischayam ... 23
Biographical Summary of His Holiness Guru Jnanasambandha Desikhar ... 25
ஸ்ரீமத் குருஞானசம்பந்த தேசிகர் சரித்திர சார சங்கிரகம் ... பக்கம் 35


## நூல்


சிவபோகசாரம்

க. அடிகள் வணக்கம் ... 1
உ. பெறுதற்கருமை ... 6
௩. அறியும் பகுதி ... 9
௪. உபதேச விளக்கம் ... 13
ரு. அநுபூதிநிலை ... 22
சு. உபாய நிலை ... 28
எ. பணியறுத்தல் ... 34
அ. துறவின் பகுதி ... 49
கூ. அறிவோர் புகழ்ச்சி ... 56
க0. மடவோர் பழிப்பு ... 58
கக. பொது நிலை ... 60
தனி. கட்டளைக் கலித்துறை ... 65
கலிவிருத்தம் ... 67
வாழ்த்துப்பா ... 68
Glossary ... 69
சோக்கநாதவெண்பா ... 79
செய்யுள் முதற்குறிப்பகராதி ... 113

# சிவபோக சாரம்

## செய்யுள்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அகத்தை | 16 | ஆர்க்குந் | 22 |
| அகமாதி | 10 | ஆர்பெரிய | 44 |
| அதிட்டான | 55 | ஆரறிவார் | 2 |
| அநாதிசுக | 17 | ஆவலுற்றிடு | 37 |
| அநித்தியத்தை | 56 | ஆறாறு......யுயிர்பேறாக | 41 |
| அமைத்த | 45 | ஆறாறு..... யுயிர்வேறாக | 11 |
| அரணங்க | 28 | ஆறாறு......மூர்த்திகள் | 62 |
| அரியயற்கு | 3 | ஆறாறு......வல்வினையு | 12 |
| அருவுமுருவு | 2 | ஆறாறு......றறிந்தனையே | 19 |
| அருளறிந்து | 30 | ஆணசுக | 42 |
| அலைவற்றிரு | 16 | இட்டசன | 26 |
| அவரவர்வினை | 67 | இந்தனத்தி | 10 |
| அவரவருக் | 34 | இருளுதய | 4 |
| அழுந்தாதே | 34 | இற்றைவரை | 18 |
| அளவிலாச் | 53 | இன்பசுக | 32 |
| அறியார் | 60 | இன்னவினை | 43 |
| அறிவாயறி | 57 | ஈசன்பல | 48 |
| அறிவிழந்து | 50 | ஈசனடியி | 24 |
| அறிவுநீ | 28 | உருவையரு | 9 |
| அன்புமிக | 9 | உரையிறந் | 7 |
| அன்றேயநாதி | 43 | உள்ளங்கரை | 22 |
| அன்றேயர | 64 | உள்ளதுதான் | 48 |
| அனைத்துலகு | 49 | உள்ளமல | 57 |
| ஆகஞ்சிறைச் | 54 | உள்ளிருந்தே | 4 |
| ஆகம்பகை | 52 | உன்னுதே | 30 |
| ஆகாதகா | 53 | ஊட்டும்வினை | 40 |
| ஆசையறாய் | 64 | எங்குமிரு | 14 |
| ஆய்வார் | 65 | எங்கேநட | 35 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| எடுத்தவுட | 36 |
| எத்தனைதான் | 51 |
| எத்திசை | 50 |
| எல்லாமுன | 66 |
| எவ்வுயிருங் | 36 |
| என்னையறி | 14 |
| என்றுஞ்சனன | 34 |
| என்றுஞ்சிவ | 25 |
| என்னதன்று | 41 |
| என்னிடத்தி | 38 |
| ஏதேது......சொன்னா | 23 |
| ஏதேது......பேசிடினு | 35 |
| ஏற்றாத | 63 |
| ஐந்தறிவாற் | 61 |
| ஒருகோடி | 8 |
| ஒருமையுட | 6 |
| ஒழியாத | 5 |
| கட்டமாங் | 39 |
| கண்டேனிப் | 3 |
| கள்ளவரனே | 45 |
| கற்கவிட | 59 |
| கனக்கும் | 66 |
| காண்பதும் | 6 |
| காயங்கர | 13 |
| கிட்டாத | 17 |
| கூட்டுவது | 47 |
| கேளாதெனை | 46 |
| சத்துருவு | 42 |
| சித்திரு | 1 |
| சுட்டறிவு | 32 |
| சுத்தநில | 21 |
| சுத்தவத்தை | 20 |
| சும்மாதனு | 46 |
| செங்கமலப் | 14 |
| செறியுந் | 31 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தத்துவங்க | 12 |
| தத்துவத்தை | 31 |
| தன்பெருமை | 7 |
| தன்னையறியார் | 58 |
| தன்னையிழ | 29 |
| தனையறியாரீச | 58 |
| தாகமறந்து | 56 |
| தானல்லா | 29 |
| தானேவசத் | 63 |
| தில்லைவனங் | 65 |
| தூரத்தியுன்னை | 49 |
| தேகநாமென் | 29 |
| தேகமறந்து | 33 |
| தேகாதிநா | 18 |
| தேசஞ்சிவா | 48 |
| தேசமூர்பேர் | 52 |
| தேசுசெறி | 15 |
| தேடுந்திரவிய | 5 |
| நற்பதஞ்சே | 24 |
| நன்கருத்தே | 44 |
| நன்னெஞ்சே | 26 |
| நனவாதி | 11 |
| நாதனார் | 25 |
| நாம்பெரிய | 38 |
| நாணிங்கா | 15 |
| நானுஞ்சுக | 24 |
| நின்னறிவில் | 32 |
| நின்னைமதி | 55 |
| நீதியிலா | 60 |
| நெருப்பென் | 21 |
| பரபரக்க | 61 |
| பரமரக | 8 |
| பரவிமனம் | 13 |
| பாசஞ்சட | 37 |
| புசிப்போஞ் | 27 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| பூதாதிபாச | 33 | மின்போலத் | 51 |
| பொய்யில் | 54 | முப்பதுஞ் | 36 |
| பொல்லாத | 47 | முற்றின்ப | 37 |
| போகம்புவ | 35 | முன்னைவினை | 40 |
| மனவாக்கு | 39 | வன்மைபுரி | 41 |
| மனையில்வரு | 20 | வாக்குமன | 27 |
| மாதாபிதா | 19 | வாயுவெளி | 59 |
| மாயைமல | 23 | வெறும்பா | 25 |
| மிருத்தகுல | 62 | | |


## சொக்கநாதவெண்பா

## செய்யுள்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அடியார் | 94 | ஆறாறு ... மூர்த் | 97 |
| அடியேனு | 89 | ஆறுதலை | 110 |
| அரும்பாச | 106 | இக்காலத் | 93 |
| அருவருப் | 86 | இட்டாசன | 102 |
| அறிவுபா | 108 | இறந்தும் | 82 |
| அன்பர்க் | 105 | ஈண்டுமெனை | 104 |
| அன்றுமுத | 108 | உணர்த்தி | 87 |
| அனைத்து | 87 | உரையிறக் | 97 |
| ஆசானுளத் | 89 | உலகவெறுப் | 82 |
| ஆடரவஞ் | 79 | உள்ளமுனை | 95 |
| ஆர்க்குக் | 96 | உன்னைச்சிங் | 109 |
| ஆர்வந்தெ | 85 | உன்னைவிட | 105 |
| ஆரிடத் | 84 | ஊனதுவான | 102 |
| ஆலந்தரி | 99 | எக்காலந் | 95 |
| ஆற்றை | 90 | எக்காலமிக் | 92 |
| ஆறாறு ... கன்ம | 89 | எக்காலமெய் | 92 |
| ஆறாறு ... சாரா | 91 | எப்போது | 83 |

# செய்யுள்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| எரிசுடுவ | 83 |
| எல்லாமும் | 81 |
| எல்லாமுனது | 99 |
| எல்லார்கருத் | 96 |
| எவ்விதையை | 96 |
| என்செயலே | 104 |
| என்போன்மல | 101 |
| என்னதியா | 99 |
| என்னவினை | 88 |
| என்றுனுனை | 81 |
| என்னைவளை | 94 |
| ஏடாரு | 80 |
| கருணாநிதி | 103 |
| காக்கைநரி | 80 |
| காடோவனமோ | 91 |
| காயமோ | 83 |
| காலவசமோ | 90 |
| கான்றசோ | 85 |
| கெடுங்கால | 88 |
| சேகரத்தி | 94 |
| சொக்கநாதா | 110 |
| தவமோ | 87 |
| தன்னந்தனி | 100 |
| தனுவாதி | 107 |
| தாயர்மக | 98 |
| தீதாமவா | 100 |
| தீவினையா | 98 |
| துஞ்சப்பிணை | 106 |
| துன்றுபர | 91 |
| தேகாதி | 107 |
| தேவேமதுரை | 109 |
| நரகமினி | 105 |
| நலம்விளை | 85 |
| நானேதனு | 106 |
| நீத்தமெழு | 84 |
| நின்பாட | 107 |
| நின்னளவி | 109 |
| நீணுட்பிறந் | 90 |
| நீயியற்ற | 108 |
| நீயேபரம | 86 |
| நீயேயொளி | 101 |
| நீரிலே | 104 |
| நோயால் | 98 |
| பஞ்சமா | 80 |
| பத்திமெத்த | 93 |
| பிறிந்தேன் | 88 |
| புண்கட்டு | 79 |
| பூண்டமல | 103 |
| பேசாநுபூதி | 82 |
| பேரன்ப | 101 |
| மற்றொரு | 100 |
| மறையாக | 84 |
| முன்னளவின் | 97 |
| முன்னைமல | 103 |
| மோகங்கரை | 102 |
| மோகாபிமான | 93 |
| வறிஞர்தமை | 81 |
| வாக்கிலுரை | 92 |
| வாளைழும்மல | 95 |
| விதிமார்க்க | 86 |

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

௨௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவபோகசாரம்

# SIVA-BHOGA-SARAM

## THE ESSENCE OF BLISSFUL EXPERIENCE

—:o:—

### க. அடிகள் வணக்கம்.

சித்தி தருநாதன் றென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப்ர காச னுண்மை
தருநாத னங்குருநா தன். (க)

---

### 1. SALUTATION TO THE GURU.

1. The Lord that giveth attainment
The Lord that liveth in the South Kamalai
The Lord that inspireth love
The Lord that is supreme,
The Great Lord of Freedom, Jnanaprakas,
The Lord that revealeth truth
He is our master.

அருவு முருவு மருவுருவு மல்லா
வொருவ னுயிர்க்குயிரா யோங்கித்—திருவார்
கமலைவரு ஞானப்ர காசனென வந்தே
யமலபதந் தந்தெனையாண் டான். (௨)

ஆரறிவார் நீதிவழி யாரறிவார் சித்திமுத்தி
யாரறிவார் நற்றவங்க ளன்பனைத்துப்—பாரெவர்க்குங்
கத்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனு
மத்தனென்போல் வந்திலனா னால். (௩)

---

2. The one, that is neither the formless
Nor the form nor the formless form,
Sprang as the life of all life and came
Hailing from holy Kamalai, Jnanaprakas,
He gave me His immaculate feet
And admitted me into His Grace.

3. Who could know the path of justice,
Who could know Siddhi and Mukthi,
Who could know the good austerities
And fullness of love,
If the Lord of all men on Earth,
The Father, Jnanaprakas of Kamalai,
Had not come in a form like mine ?

அரியயற்கு முன்னா ளடிமுடியுங் காணாப்
பெரியவனே வந்து பிறந்து— துரியம்
பெருக்கின்றான் ஞானப்ர காச னாகி
யிருக்கின்றா னாரூரி லின்று. (௪)

கண்டேனிப் பாசங் கழிந்தே னமுதைமுகந்
துண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன்--வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலைப் பொற்பாத
ஞானபர காசனையே நான். (௫)

---

4. The Great One Himself, whose crown and feet
Could not be seen by Aja and Hari,
Hath come, hath been born. He increaseth Turiya
The estate of man, the highest serenest calm,
In Arur He hath his abode this day
As Jnanaprakas.

5. I saw Him. My bonds slipped off.
Nectar I scooped and drank.
I was in blissful ecstasy.
I saw Jnanaprakas, Him of Kamalai,
Whose gardens pour honey to the murmuring bees,
Him with golden feet like lotus red.

உள்ளிருந்தே யென்று முணர்த்துகினுங் கண்டிலரென்
றுள்ளும் புறம்புமா வோமென்று—மெள்ள
நரருருவா யாரூரில் வந்தா னமையாண்
டருள்புரிஞா னப்ரகா சன். (௬)

இருளுதய நீக்கு மிரவியைப்போ லென்னு
ளருளுதய நன்று யருளி—மருளுதய
மாற்றியவ ளூரன் மாம்றையு மாகமமுஞ்
சாற்றியஞா னப்ரகா சன். (௭)

---

6. We dwell within and ever prompt them,
Still they have not found us out;
Now let us be within, without as well,
Thought Jnanaprakas.
And soft in human form He came
In Arur; into His Grace accepted us.

7. Like the sun that driveth the enshrouding darkness
With the dawn of His Grace, well bestowed in me
The appearance of ignorance He drove
He of Arur, that uttered the Vedas
And Agamas great, Jnanaprakas.

ஒழியாத பேரின்பத் துள்ளா யுலகில்
விழியா திருந்து விடவே—யழியாத
பூரணா செங்கமலப் பொற்பாதா தென்கமலை
யாரணா நாயேற் கருள். (அ)

தேடுந் திரவியமுஞ் சிற்றறிவும் பற்றுதலுங்
கூடும்பொய் யென்றருளிற் கூட்டினா—னாடரிய
ஞானப்ர காசனுயர் நற்கமலை மாநகர்வாழ்
வானப்பி றையணிந்த மன். (௯)

---

8. Merged in great unending joy
To remain unawakened to the world,
Thou Perfect One, Everlasting,
Thou with golden feet like lotus red,
Thou of Kamalai of the South
Lord of the Vedas, help Thou me,
Me as lowly as a dog.

9. The treasure that is sought,
The knowledge imperfect,
The desire that clingeth,
All these are lies, — In Grace
He made known to us, Jnanaprakas,
That dwelleth in the great city,
Kamalai, noble and fair,
The King hard to approach,
Adorned with the crescent moon.

காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போ லேயிதமாய்ப்
பூண்பதும்பொ யெவ்விடத்தும் போகமும்பொய்-மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த் துன்னியென்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே மெய். (௰)

## உ. பெறுதற்கருமை

ஒருமையுட னீசனரு ளோங்கியென்றுந் தூங்க
லருமை யருமை யருமை—பெருமையிடும்
பாங்காரங் கோப மபிமான மாசைவினை
நீங்காத போதுதா னே. (கக)

---

10. Whatever be seen is lie, whatever be heard is lie,
Whatever be taken up as wholesome work is lie,
Whatever be enjoyed whithersoever is lie. But this,
That Sambandha cometh in sublimity,
Closeth as a flood of joy and hath His abode in me,
This alone is true.

## 2. THINGS HARD OF ACHIEVEMENT

11. Hard, hard, hard it is to be lapped
In single-minded communion with the growing grace of God,
When conceit, cruelty, egotism, anger,
Attachment and actions born of desire,
When these are not eschewed.

தன்பெருமை யெண்ணாமை தற்போத மேயிறத்தன்
மின்பெருமை யாஞ்சகத்தை வேண்டாமை—தன்பா
லுடலைத் தினம்பழித்த லோங்குசிவத் தொன்ற
னடலைப் பிறப்பொழியு நாள். (கஉ)

உரையிறந்தா லுன்னு முணர்விறந்தான் மாயைத்
திரையிறந்தாற் காண்கின்ற தேவை—வரைபெருக
வாசிப் பதுநாவால் வாழ்த்துவது நாடகமாய்ப்
பூசிப்ப துஞ்சுத்தப் பொய். (கங)

---

12. Thinking not of one's own glory, losing self-conceit,
Discarding the world, whose glory is that of the lightning flash, so fleeting,
Despising one's own body, day in, day out,
Holding holy communion with the exalted Lord—
The day when these do happen is the day
When painful birth doth cease.

3. It is wholly wide of the mark, feigning and farcical,
To read the sacred lore in ever-extending bounds,
To praise with tongue and worship God,—
The God who is only seen
When word hath ceased, and thought hath died,
And the screen of Maya hath been torn asunder.

பரம ரகசியத்தைப் பாழான வாயா
லிரவுபக லெந்நேர மின்றிக்—குரனெரியக்
கூப்பிட்டுங் காணுமோ கோழைமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணாப் பொருள். (கச)

ஒருகோடி யாகமங்க ளெல்லா முணர்ந்தும்
பெருகுதவஞ் சித்தியெல்லாம் பெற்றும்—குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம். (கரு)

---

14. Can it be found the Secret so supreme
Even though thou callest out, night and day,
Unceasingly, till thy voice cracketh hoarse—
O feeble foolish heart !—the Thing
That could not be found even though Vishnu did seek
Cleaving through the solid earth?

15. Even though they master a million scriptures
Practise stern austerities and powers mysterious gain,
To the men that cannot be steadfast
Where the Guru's grace hath placed them
There will be mental perturbations
Ever and aye.

அன்புமிக வுண்டா யதிலே விவேகமுண்டாய்த்
துன்பவினை யைத்துடைப்ப துண்டா—யின்பந்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டா யோடி
வருங்கா ரணர்க்குண்மை வை. (கசு)

## ௩. அறியும் பகுதி.

உருவை யருவை யொளியை வெளியை
யிருளைச் சிவமென் றிராதே—மருளைப்
பிறிந்* தறிவிற் கண்டதனைப் பின்னமற வெங்குஞ்
செறிந்தபொரு ளானே சிவம். (கஎ)

---

16. Keep the truth apart for those,
Whose love doth grow from more to more,
Whose knowledge groweth from out that love,
Who wipe out Karma, the cause of pain,
Who go running thirsting after
The Perfection that yieldeth Joy.

### 3. THINGS TO BE KNOWN

17. Mistake thou not as Sivam anything,
That hath form or that is formless
Or light or space or darkness.
That Thing is Sivam Which filleth
Indistinguishably, through and through,
That which hath been realised
In knowledge when purged of ignorance.

---

* அறிவைக் கண்டதனை, என்றும் பாடம்.

அகமாதி கண்ட வறிவாகி யெங்குஞ்
சுகமாகி யின்ப சுகமாய்ச்—சுகாதீதத்
தானந்த வெள்ள மதுவாய்ச் சுகத்தையகன்
றானந்த மாதியிலா தான். (௧௮)

இந்தனத்தி லங்கி யெரியுறுநீர் தேனிரதங்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண்—சந்தமு
மத்துவித மாவதுபோ லான்மாவு மீசனுமாய்
முத்தியிலே நிற்கு முறை. (௧௯)

---

18. He who is the knowledge realised
Within, without
Who is all-pervading joy, delightful happiness
Who is the flood of ecstasy transcending joy,
Who is yet, apart from joy,
He is the One,
That neither end nor beginning hath.

19. Just as fire in wood, water in fire,
Taste in honey, fragrance in flower,
Ether in air and light in the eye
Are distinct and yet not two
Even so do the soul and the Lord
Stand related in liberation.

ஆறாறு தத்துவமு மாணவமு நீங்கியுயிர்
வேறாக நின்றவிடஞ் சொல்லின்—மாறா
விருளாய பாவனையற் றெங்குமாய் நின்ற
பொருளோகா ணீயே புணர். (௨௦)

நனவாதி யந்தத்தி னூடு சுகந்தன்னைக்
கனவாதி யந்தத்திற் கண்டு—நனவாதி
தோற்றிடும்போ தந்தச் சுகரூபங் கண்டவர்கண்
மாற்றிடுவ ரென்று மலம். (௨௧)

---

**20.** Wouldst thou know the place
Where the soul doth stand alone
With tatvas thirty-six and Anava cast off,
Beyond the darkness of ceaseless thought?
Behold the Thing that standeth everywhere!
Unite thyself with It.

**21.** The joy they seek in wakeful states
They find in states of dream;
They see that form of joy again
When wakeful states come on;
Verily, such as they
Shall smite impurity.

தத்துவங்க ளெண்ணித் தலையடித்துக் கொள்ளாதே
தத்துவங்க ளேதென்னிற் சாற்றக்கேண்—மெத்துஞ்
சுகாரம்ப மாஞ்சிவத்திற் றோயாத மாயா
விகாரங்க டத்துவமா மே. (௨௨)

ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு
நீறாக முத்திநிலை நிற்போர்க்குப்—பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோ தும். (௨௩)

---

22. Why knock thy head in counting the tatvas?
Harken what they are!
They are but Maya's mutations
That cannot touch, in whatever way
Sivam, the source of joy.

23. As guide to those who stand for bliss,
With tatvas six times six
Anava and actions hard
All to ashes turned,
If one doth search through all the books
That are spread on earth,
Just one half of a single verse
In Siddhiyar will do.

## ௪. உபதேச விளக்கம்.

பரவிமனம் போகாப் பரத்தடைய நாளு
மிரவுபக லற்ற விடத்தே—திரமாக
நில்லென்றான் கண்டவெல்லா நேதிபண்ணி மும்மலமுங்
கொல்லென்றான் ஞான குரு. (௨௪)

காயங் கரணமுத னான்கிற்குங் காரணந்தா
னாயவிருண் மாயை யதுவென்றாற்—றூயபொருட்
போதனே செங்கமலப் பொற்பாத னேயெனைநீ
யேதென்று சொல்லா யினி. (௨௫)

---

### 4. THE LIGHT OF SPIRITUAL INSTRUCTION.

24. The Supreme that the mind cannot approach
If thou wouldst like to reach,
Stand firm always at the place
Wherein is neither night nor day :
Know that whatever thou seest is not thou,
Quell down the Malas Three—
The teacher of wisdom said.

25. If dark Maya be the cause of the four
Body, karana, world, enjoyment,
Thou that teachest the truth so pure,
Thou with golden feet like lotus red
Say, what am I?

என்னை யறிவென்றா னென்னறிவி லானந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமு—மென்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றா னிம்மூன்று
மாராய்ந் தவர்முத்த ராம். (௨௬)

எங்கு மிருக்கு மறிவுநீ யேகமா
யங்கங் குணர்த்து மறிவுநாம்—பொங்கு
மலமறைத்தன் மாயை மயக்கல் விகாரப்
பலமனைத்துங் கன்மமலம் பார். (௨௭)

செங்கமலப் பொற்பாதன் சீர்பாத வல்லவங்க
ணங்கமலை வாழ்கிளியே நாடிக்கேள்—சங்கையிலாத்
தத்துவத்தைக் காட்டியதிற் றத்துவத்தைக் காட்டியருட்
டத்துவத்தைக் காட்டியது தான். (௨௮)

---

26. Intelligence, He called me.
The joy within my intelligence, He called Sivam.
What constantly hid Thee from me, He called Pasam.
Whoever have understood these three
They are the liberated.

27. Thou art the intelligence that is everywhere
We are the One Intelligence instructing everywhere
Puffed-up mala hideth, Maya doth confound.
Lo! it is karma that yieldeth all the diverse fruits.

28. O, Parrot that hath thy home in our Kamalai,
Lend thy willing ears to hear the powers
Of His noble golden feet like lotus red.
They showed the nature of countless tatvas
The tatva of the soul therein
And the tatva of the loving grace.

தேசு செறிகமலைச் செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப்ர காசன்—பாசவினை
வாட்டினான் மீட்டுநான் வாரா வகையருளைக்
காட்டினான் கூட்டினான் காண். (௨௯)

நானிங்காய் நீயங்காய் நாட்டமற வைத்ததற்பி
னானெங்கே நீயெங்கே நாதனே—வானெங்கு
மொன்றாகி நின்ற வுணர்வுநீ யுன்னறிவி
னன்றாகத் தோன்றுசுக நாம். (௩0)

---

29. He with golden feet like lotus red
Coming of Kamalai full of splendour
Jnanaprakas, whose Tamil is of great repute,
He made the pasam of Karma wither
Showed His Grace and united me to it,
Lest I should be born again.

30. "When the perception that I am here and Thou art there
Hath been brought to an end,
Where would I be and where wouldst Thou, O Lord?
"Thou art the Intelligence standing united
Through all the Universe, and We the joy
Appearing clear in Thine Intelligence."

அலைவற் றிருந்த வறிவுநீ யாங்கே
நிலைபெற் றிருந்த சுகஞேய—மலைவற்
றிருந்ததுகண் டாயே யிருந்தபடி யத்தோ
டிருந்துவிடெப் போது மினி. (௩௧)

அகத்தை யிழந்தருளா யவ்விடத்தே தோன்றுஞ்
சுகத்தி லழுந்திவிடச் சொன்னான்—மகத்தான
சிற்பரனா ரூர்தனில்வாழ் செங்கமலப் பொற்பாத
தற்பரஞா னப்ரகா சன். (௩௨)

---

31. Thou art the Intelligence standing unagitated.
Perceivest thou therein the joy
That endureth without agitation as well.
Remain true and fast in that realisation
United with it for ever hereafter.

32. He bade me cast off the ego from me
Sink in the joy that riseth in grace
The Magnificent one transcending all
knowledge,
He with golden feet like lotus red, residing
in Arur
He that is highest, Jnanaprakas.

கிட்டாத வீசனுனைக் கிட்டி யருள்புரிந்த
நிட்டாநு பூதி நிலையிலே—முட்டா
திருவன்னி சேர்ந்துமாற் றேறியபொன் போல
வருமின்ப பூரணமா வை. (௩௩)

அநாதிசுக ரூபி யரனடிக்கீ ழென்று
மநாதிசுக ரூபி யான்மா—வநாதி
யிருந்தமலம் போக்கி யிறையருளி னாலே
யிருந்தபடி யேகண் டிரு. (௩௪)

---

33. Stand unhindered in the state
Of realisation of holy union
Which the Lord, Unapproachable
Drawing near, in grace vouchsafed to thee.
As gold put in fire enhanceth in quality
Even so shalt thou become
The perfection of joy that cometh to thee.

34. Eternal Bliss is the form of Hara
Also eternal Bliss in form is the soul
While beneath His feet, with eternal malam removed,
Remain thou perceiving that state
By the grace of God.

இற்றை வரைக்கர ணத்தோ டிணங்கினையே
யிற்றைவரைச் ஜென்ம மெடுத்தனையே—யிற்றைவரைத்
துன்பவெள்ளத் துள்ளே துளைந்தனையே யீதறநல்
லின்பவெள்ளத் துள்ளே யிரு. (௩௫)

தேகாதி நானல்ல வென்றறிந்தாற் சித்தமயல்
போகாத தென்னையோ புண்ணியா—தேகாதி
தன்னளவே யம்மயக்கஞ் சத்தியமா மெப்பொழுது
முன்னளவே யில்லை யுணர். (௩௬)

---

35. Till now thou hast been in union with karana
Till now thou hast been taking births
Till now thou hast been immersed in a flood of pain.
That this may end, abide thou in the goodly flood of joy.

36. " Even when it hath been understood
That body and such things are not I
The confusion of the mind goeth not
Why, O, Virtuous one ? "
" That confusion extendeth as far as body and such things only.
Know this, verily; it never doth reach as far as thee."

ஆறாறு தத்துவநீ யன்றென் றறிந்தனையே
யாறாறுங் கண்டறிவ னாயினையே—மாறும
லுன்னறிவி லானந்தத் தோங்கினையே யோராம
னின்னறிவை விட்டதுவாய் நில். (௩௭)

மாதா பிதாச்சுற்ற மென்று மயங்கினையே
நீதான் றனுவாகி நின்றனையே—யீதெல்லாம்
பொய்யென் றறிந்தனையே பூரணா னந்தவெள்ள
மெய்யென் றறிந்தனையே மெய். (௩௮)

---

37. Surely hast thou learnt that six and thirty tatvas are not thou,
Surely hast thou seen those six and thirty tatvas and grown wise,
Surely hast thou constantly increased in the joy
That springeth in thine intelligence.
Leave perceiving with thy knowledge and stand at one with that.

38. Thou wert surely perplexed with thoughts of mother, father and kin,
Thou thyself surely stood with thy body identified,
All these were lies, thou hast understood.
Thou hast understood that the flood of perfect joy is true.
Verily, true this is.

மனையில்வரு போகத்தின் மாதர்மக்கள் பாச
வினையி லழுந்தி விடாதே—யுனையிழந்து
காணாமற் கண்டானைக் காட்சி யறக்கலந்து
பூணாம லெப்பொழுதும் பூண். (௩௯)

சுத்தவத்தை நாடியிடுஞ் சுத்த விராப்பகலா
மெத்தவத்தை நாடி விடுவையேற்—சுத்தவத்தை
தானா யிரண்டுந் தவிர்ந்த சிவானந்த
வானாவை நீயே மதி. (௪௰)

---

39. Immerse not thyself in pleasures of the home
In bonds of spouse and children
Lose thyself and unite, losing perception
With Him who is not seen but revealeth Himself
Wear Him, without thyself wearing Him, ever and aye.

40. If thou seekest the suddha state with its suddha night and day,
Thou shalt realise that state and note this,
Thou shalt become the Akas of Sivanand
Where both night and day are not.

சுத்தநில முன்றனக்குச் சொல்லக்கே ளொல்லைவினை
தத்துவங்க ளாருறுந் தான்பெருகக்—கத்திடுவ
ரெல்லா மிழந்த விடமே யதுவாக
நில்லா யதுவே நிலை. (சக)

நெருப்பென்றால் வாய்சுடுமோ நெய்பாறேன் *கட்டி
கருப்பென்றாற் றித்தியா காணீ—விருப்புட
னீபிரம மென்றக்கா னீபிரம மாயினையோ
நீபிரமஞ் சற்குருவா னில். (சஉ)

* கண்டு என்றும் பாடம்.

---

41. I shall tell you of the land of the pure.—
Men prattle till their old timeless karma and contact with tatvas increase.—
It is the spot beyond all these.
Stand there.—That is the proper place.

42. Would it burn thy mouth if thou said 'fire'?
It wouldn't taste sweet if thou said 'ghee,
Milk, honey, candy, jaggery'.
Shalt thou become Brahmam
If thou sayest thou art Brahmam ever so eagerly?
Stand thou as Brahmam by the good Guru made.

ஆர்க்குந் தெரியாத வானந்த வின்பவெள்ள
மேற்கொண்டு கொண்டு விடுகுதில்லை—யார்க்குந்
தெரியாப் பரப்பிரமஞ் சேர்த்தா யுனக்குச்
சரியார் சிதம்பரநா தா. (௪௩)

## ௫. அநுபூதி நிலை.

உள்ளங் கரைய வுடல்கரைய வானந்த
வெள்ளங் கரைபுரண்டு மேலாகக்—கள்ளமலம்
பொய்யாக வென்னுட் புகுந்தவா றென்கொலோ
வையா தியாகவிநோ தா. (௪௪)

---

43. The flood of sweet joy that none doth know
Floweth over, carrieth away, and leaveth me not.
Thou hast united me to the supreme Brahmam
That none doth know.
Who is Thy equal, Chidambaranatha?

## 5. THE STATE OF REALISATION

44. How didst Thou enter me, Sire, that sportest in bounties
So that the flood of joy doth overflow the banks and rise
Consuming my heart, consuming my body
And that the roguish impurity hath become a falsehood?

ஏதேது செய்தாலு மேதேது சொன்னாலு
மேதேது சிந்தித் திருந்தாலு—மாதேவா
நின்செயலே யென்று நினதருளா லேயுணரி
லென்செயலே காண்கிலே னே. (௪௫)

மாயை மலமெங்கே மறைந்ததோ மாயைதனி
லாயசக மெங்கே யழிந்ததோ—காயமதிற்
றங்கும் புருடனெங்கோ சச்சிதா னந்தவெள்ள
மெங்கு மிகக்கோத்த தே. (௪௬)

---

45. Whatever I do, whatever I say
Whatever I remain thinking, Mahadev !
If I but realise, by Thy Grace, all that action to be Thine,
I do not perceive mine.

46. Where hath the maya-mala hidden,
Where hath the maya-made world perished,
Where is the purusha that resideth in the body ?
Lo ! the flood of truth, intelligence and joy
Hath in profusion entered everywhere.

நானுஞ் சுகவடிவாய் நண்ணினே னின்னருளால்
வானுஞ் சுகவடிவாய் மன்னிற்றே—வானுஞ்
சுகரூப மன்றுமணந் தோற்றநிலம் போலுன்
னகரூப மட்டே யது. (௪௭)

ஈச னடியி லிருக்கையிலே யெங்கெங்கு
மீசனடி தேடி யிளைத்தேனே—பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் றன்னுடைய
நற்பதத்தைக் காணுமு னான். (௪௮)

நற்பதஞ்சே ராரூரின் ஞானப்ர காசனெந்தை
தற்பரனோர் ஞானவாட் டந்தானே—சொற்பனத்துங்
காரார் மறலியயன் கண்ணனுக்கு மஞ்சேனை
யாரானு மென்னசெய லாம். (௪௯)

---

47. I have become the form of joy, by Thy grace
Akas also hath stood as form of joy
But even Akas is not the form of joy.
Like the earth that hath lost its smell,
The Akas is merely an inner form of Thine.

48. Abiding though I was, under the feet of the Lord,
Weary I had grown, seeking His very feet everywhere
Before I saw His holy feet, His pretty, ineffable feet,
His golden feet like lotus red.

49. Jnanaprakas in Arur of sacred standing,
My Father, the Highest, gave me a sword of wisdom,
Who dare do anything to me, me who feareth not
Dark Death, Brahma or Vishnu even in my dreams ?

வெறும்பாழிற் பேரின்ப வெட்ட வெளிதன்னிற்
குறும்பாளர் காணாக் குடிலி—னுறும்பாச
மோட்டியெனை வைத்தனனே யுற்றபிர பஞ்சமெல்லா
மாட்டியஞா னப்ரகா சன். (௫0)

என்றுஞ் சிவத்தோ டிணைபிரியா தேயறிவாய்
நின்றபடி தன்னை நிகழ்த்தினான்—மன்றி
னடமாடு மாரூரன் ஞானப்ர காசன்
றிடமாக வென்னுள்ளத் தில். (௫க)

நாதனார் தென்கமலை நாயனா ரெவ்வுயிர்க்கும்
போதனார் செங்கமலப் பொற்பாதர்—பேதமற
வொன்றிரண்டு தானறவே யுண்மையிலே கூட்டியெனை
யின்றறவே வைத்துவிட்டா ரே. (௫௨)

---

50. In the perfect void, in the utter expanse of great joy,
In the hovel the mischievous thieves can't find,
He placed me having driven the pasam,
Jnanaprakas, that moveth all universe.

51. He showed it in my heart assuredly
The manner of my existence as intelligence
Ever united with Sivam without severance
He of Arur, that danceth in the Hall, Jnanaprakas.

52. The Lord, the Chief of Kamalai of the South
That granteth wisdom to all living things
He with golden feet like lotus red
Hath, this day united me with truth
And placed me securely
With all differences gone,
With the thought, that we are one or two, also gone

நன்னெஞ்சே நீகேட்ட நன்மையெல்லாஞ் சொல்லுதற்குக்
கன்னெஞ்ச மாலயனுங் காணாதோன்—வன்னெஞ்ச
ரின்னகுறை யுண்டென்று வீச னெதிர்வந்தா
னென்னகுறை சொல்லா யினி. (௫௩)

இட்டசன மெங்கே யிதமகிதந் தானெங்கே
துட்டசன மெங்கே தொழிலெங்கே—சிட்டருடன்
கூடி யிருந்ததெங்கே குன்றாச் சிவானந்த
நாடி யதுவாயிருந்த நாள். (௫௪)

---

53. The Lord whom the stone-hearted Vishnu and Brahma
have not seen,
Of whom even the hard-hearted cannot say,
'Lo, He is wanting in this'—He hath come before
thee
To tell thee of all the good things thou hast desired.
My good heart, what else dost thou want ?

54. Where are the friends, where the things of pleasure
and pain,
Where are the wicked, the actions where are they,
Where is the communion with the good,
The day thou hast desired Siva's joy that diminisheth
not
The day thou hast stood as that ?

வாக்குமனக் காயத்தான் வந்தபொரு ளத்தனையும்
வாக்குமனக் காயமுடன் மாயுமே—வாக்குமனக்
காய முடனிழந்து காண்ஞா திருஞான
ஞேய மிழந்த நிலை. (௫௫)

புசிப்போஞ் சிவபோகம் பூரணமா யெங்கும்
வசிப்போ முலகில் வசியோ—முசிப்பின்றி
வாழ்வோஞ் சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோ மெமக்கார் சரி. (௫௬)

---

55. All the things that come with speech or mind or body
They shall cease to be with speech or mind or body.
Lose thy speech and mind and body. Perceive the state
Wherein perceiver, perception and the perceived are lost.

56. We enjoy Sivabhoga, we live in perfection everywhere
We are not of the world. We live without end.
We bow down to the golden feet
Of the great tapasvins who have realised Sivam.
Who then are our equals?

## ௬. உபாய நிலை

அறிவுநீ யென்ன வறிந்தறிந்து மாயைச்
செறிவுநா னென்றென்று சேர்ந்தா—லறிவு
தெரிந்திடுமோ வின்பசுகஞ் சேர்ந்திடுமோ நின்னைப்
பிரிந்திடுமோ சென்மப் பிணி. (௫௭)

அரணங்க டாமெரித்த வத்தரே யென்னுட்
கரணங்க ளோட்டும்வகை காட்டீர்—கரணங்க
ணீயதுவாய் நில்லாம னின்னறிவைக் கண்டருளிற்
போயதுவாய் நின்றுவிடப் போம். (௫௮)

---

### 6. THE MEANS TO REALISATION.

57. Thou knowest full well thou art intelligence.
Still if thou join with Maya saying that thou art
Filled with it, would wisdom be found,
Would blissful joy come to thee,
Would the disease of birth leave thee?

58. 'Father, that hath burnt the fortresses,
Show me the way to drive my karanas away!'
'If thou shalt not identify thyself with karanas
But perceive thou art intelligence,
Unite thyself with grace and abide as that
They shall depart from thee.'

தானல்லா தத்தனையுந் தானென் றுழலாமற்
றானல்லா மாயதனுட் டாக்காமற் — றானல்லா
மானோ மெனும்போதத் தாக்காம லீசனிடத்
தானோனே யாயினவ னாம். (௫௯)

தேகநா மென்றென்று செப்புவீ ரீதில்வரும்
போகநா மென்று புலம்புவீர் — நோக
வருந்துவீர் தீவினையின் மாறாத வின்பம்
பொருந்துவீ ரெப்படிநீர் போய். (௬௰)

தன்னை யிழந்திடத்தே தானே சுகவடிவா
யின்னபடி யென்றறியா வெங்கோனுட் — பின்னமற
நின்றநிலை தானுந் தெரியாதே நின்றவர்கட்
கன்றோ பிறப்பறுக்க லாம். (௬௧)

---

59. He doth not confuse all that is not he to be himself,
He is not affected by Maya that hath become all,
He is not touched with the thought that he hath become all,
He hath his being in the Lord : such alone liveth really.

60. Ye that say that your bodies are yourselves,
Ye that lament that experience therein are yourselves,
Ye that suffer pain because of wicked deeds,
How would Ye go and unite with changeless joy ?

61. Those who lose themselves and become the form of joy,
Who stand united with not a mark to make them out,
With my Sovereign whose nature defieth definition,
Who perceive not the state wherein they do stand,
Such, such alone can sever the bonds of birth.

உன்னாதே பற்றா துரையாதே யொன்றியதி
னின்னாம மில்லை நிகழாதே—பன்னாட்
பரையிறந்து நிற்கும் பயனுணர்ந்தார் நெஞ்சிற்
றிரையிறந்து நிற்குஞ் சிவம். (௬௨)

அருளறிந்து தானா மறிவறிந்தே யாங்குட்
பொருளறிந்து தானடங்கிப் போத—விருளகல
விம்மா திருந்து விகற்பமற வொன்றாகிச்
சும்மா விருக்கை சுகம். (௬௩)

---

62. In whatever thou standest united
Without thinking, without grasping, without speaking aught
Thy name, thyself of name and form and act
Shall not be found.
In the hearts of those that have realised
The Benefit beyond the urging Para shakti
Sivam will stand with the screen riven through.

63. Having realised the grace,
Having realised the intelligence that is oneself,
Having realised the truth abiding therein,
Having subdued the self,
With the dark cognisance of self dispelled,
With conceit gone, with distinction lost,
Remaining unified,
To rest in peace is Joy supreme.

'செறியுந் தனுவாதி சேர்ந்தறிந்து நின்ற
வறிவை யறிவா லறிந்தே—யறிவிழந்து
நின்றாற் சுகானந்த நீடு நிலைவேறு
சென்றாற் சுகங்கிடையா தே. (௬௪)

தத்துவத்தை விட்டருளிற் றான்கலந்து தன்னிழப்பின்
மெத்துஞ் சுகத்தின் மிகவழுந்திச்—சுத்தமா
பொன்றாகி நின்ற வுணர்வு மொழிந்தக்கா
லன்றே சிவபோக மாம். (௬௫)

---

64. Having perceived by the Supreme Intelligence
That intelligence which stood perceiving,
Joined to gross body and other parts,
If one doth stand with finite perception lost·
The blissful joy shall stand with one forever :
But if one doth go other ways
Verily, no joy shall one find.

65. Leaving the tatvas, mingling in the grace,
Losing the self and sinking well in joy
That then doth spring in plenty,
Becoming purified, standing unified,
If one loseth perception of that state of union,
Then, then alone shall be Sivabhogam.

சுட்டறிவு கெட்ட சுகாதீத வுண்மையிலே
விட்டகலா தென்றும் விரவுவோ—ரிட்டமுடன்
யோக சமாதிகளு முட்புறம்பாம் பூசைகளு
மாக நினையா ரவர். (௬௬)

நின்னறிவில் யானொளித்து நீயாகி நின்றதுபோ
லென்னறிவி னீயொளித்தே யானாகி—யெந்நாளு
நிற்கவல்லை யாமாகி னின்சனனம் போக்குதற்குக்
கற்கவல்ல தேதுமில்லை காண். (௬௭)

இன்பசுகத் துள்ளே யிருக்கலா மெப்போதுந்
துன்பவினை யுன்னைத் தொடராது—வன்பா
மருட்டேக மாயடங்கி மாயாம னெஞ்சே
யருட்டேக மாயடங்கு வாய். (௬௮)

---

66. Those that have lost perception of their senses,
And have inseparably interfused for ever
With the Truth beyond bliss,
Never shall they wish for yogic trance,
Outward adoration or worship within.

67. Just as I hid Myself in thine intelligence
And stood as thou,
If thou canst hide thyself in Mine intelligence
And stand as I, always,
Lo, there is nothing more to learn
To end thy round of births.

68. Thou canst dwell in blissful joy;
Never shall painful karma pursue thee,—only
Perish not in identity with the body, the seat of hardy confusion,
Calmly abide, my heart, embodied in grace.

என்னதன்று நின்செயலே யென்றறிந்தால் யான்விரும்பி
என்னவென்று வாய்திறப்பே னீசனே—யின்னமின்ன
மெப்படியோ நாயேனை யீடேற்ற வேண்டுமுனக்
கப்படியே செய்தருளு வாய். (அகூ)

வன்மைபுரி காய மரப்பாவை தன்னையரன்
கன்மமெனுஞ் சூத்திரத்தாற் கட்டியே—நன்மைதின்மை
யாட்டுவது நாடா தறிவிலார் தஞ்செயலாய்
நாட்டுதல்போ லுண்டோ நகை. (கூ0)

ஆறாறு தத்துவமு மாணவமு நீங்கியுயிர்
பேறாக வானந்தம் பெற்றாலும்—வேறாகப்
பார்த்திருப்ப தன்றியே பாழான கன்மத்தை
நீத்திருக்க லாமோ நிலத்து. (கூக)

---

89. When I come to know nothing is mine but all Thy work,
What desire shall I have or what speak forth, O Lord,
Howsoever thou plannest further and further
To redeem me, a dog, so may Thy Will be done.

90. The fools understand not that it is Hara
That bindeth with threads of karma
The wooden puppet, body, that worketh wickedness,
And maketh it dance in good and bad.
They assert these as their own doings!
Is there anything like this deserving to be laughed at?

91. Though the soul be released
From anava and tatvas thirty-six
And attain the gift of ananda,
Can it do away with ruinous karma
Excepting that it may with detachment look at it?

ஆனசுக துக்கத் தழுந்துகினு ஞானிகடாம
யானெனதென் றெண்ணி யியைந்திடினுந்—தானதற்கு
வேறென் றருளால் *விரளமாய்க் காணிலென்று
மேறுமோ கன்ம மிலை. (௯௨)

சத்துருவு மித்துருவுந் தாரணியில் வேறில்லை
சத்துருவு மித்துருவுந் தன்னெஞ்சே—பெத்தமலம்
வீட்டும் படிக்கு வினைக்கீ டுனைத்தனுவோ
டாட்டுஞ் சிவனென் றறி. (௯௩)

* விரளம்-நீக்கம்.

---

92. Though the wise be sinking
In the joys and sorrows that happen
And acquiesce in thinking
In terms of I and mine,
If they see by Grace the body
As distinct from the soul
Can karma ever prevail? No!

93. There is no other foe nor friend on earth
One's own mind is both foe and friend,
That the mala that binds thee may be broken
Siva moves thee in the body
Accordant with thy karma, understand.

இன்னவினை யின்னதலத் தின்ன பொழு *தின்னபடி
யின்னதனு லெய்து மெனவறிந்தே—யன்னவினை
யன்னதலத் தன்னபொழு†தன்னபடி யன்னதனாற்
பின்னமறக் கூட்டும் பிரான். (கூச)

அன்றே யநாதி யமைத்தபடி யல்லாதொன்
றின்றே புதிதா யியையுமோ—வென்றுஞ்
சலியா தியற்றுவான் றன்னையே நோக்கி
மெலியா திருந்து விடு. (கூரு)

* இன்னதனுலின்னபடியாய்ப் பொருந்துமென்றமைத்தே —என்றும் பாடம். † அன்னதனுலன்னபடி—என்றும் பாடம்.

---

94. Knowing tha t such a deed, in such a place
At such a time, in such a way,
By such a thing will reach one,
That deed, in that place, at that time, in that way,
Without difference will the Lord make it reach one.

95. Except as the Being without beginning, ordained in the beginning
Will anything afresh happen today?
Look to Him alone, who worketh untiringly forever,
Be not distressed.

ஆர்பெரிய ரார்சிறிய ராருறவ ரார்பகைஞர்
சீர்பெரிய ரானந்த சிற்சொரூபர்—பேர்பெரிய
ரெங்கெங்கு தாமா யிருந்துசட சித்தனைத்து
மங்கங் கியற்றுவதா னால். (கூசு)

நன்கருத்தே தென்கமலை ஞானப்ர காசனே
யென்கருத்தே யுன்கருத்தென் றெண்ணாம—லுன்கருத்தே
யென்கருத்தென் றெண்ணியே யான்பட்ட துன்பமெலா
முன்கருத்தே தீரவறி யும். (கூஎ)

---

96. Who are great, who are small,
Who are kith, who are foe,
If He whose form is joy and knowledge,
Great in glory, great in name,
Being Himself everywhere,
Everywhere doth make and move
All knowing and unknowing world?

97. Thou of noble thoughts, of Southern Kamalai, Jnanaprakas,
Thy thoughts know fully well all the trouble I have suffered
For having thought that Thy thoughts were my thoughts,
Instead of thinking that my thoughts were thine own.

அமைத்தவினைக் கேடா வறுதினமுஞ் செய்வ
திமைப்பொழுதும் வீண்செயலொன் றில்லை-யுமைக்குரியா
னெல்லா மறிந்தெங் கியற்றுவதுந் தன்னடிமை
வல்லார் தமக்குணர்த்து வான். (௯௮)

கள்ள வரனே கருணையுட னென்னறிவி
னுள்ளசுகந் தந்துவிட வொண்ணாதோ—மெள்ள
வருத்துவதுந் தீவினையில் வாட்டுவது ஞானம்
பொருத்துவது மேன்றான் புகல். (௯௯)

---

98. Of what one doeth daily, accordant with the determining karma
Not for a wink of time is any deed vain;
Uma's Lord knoweth all and maketh those
Proficient in His service comprehend.

99. Arch Hara, won't it do to give straight away with Grace
The bliss that is of mine intelligence ?
Why is it that slowly Thou dost tease me,
Roast me in wicked deeds,
And unite me to wisdom, say ?

கேளா தெனைமலத்திற் கிட்டியெடுத் தாளாக்கி
மீளா தளித்தபர வீட்டிலெனை—யாள
வுனக்குப் பொறியோ வுனைத்தொடர்ந்தா ளென்ன
வெனக்குப் பொறியோ வினி. (௱)

சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்க—நம்மான்முன்
செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதென்று
லெய்தவனை நாடி யிரு. (௱௧)

---

100. Now, on whose head is it written,
On Thine, unasked, to approach me in mala,
Take me out, make me Thy servant in the supreme House
Thou hast given me and from which there is no returning?
Or on mine, to follow thee
And pray to Thee to make me Thy servant?

101. Can the body come without reason
Can illness come without reason
Can joy and sorrow come without reason?
They are all the deeds of Siva's grace
Accordant with our deeds in the past.
Seek desiring after Him who flings them at you.

பொல்லாத தீவினையிற் போகார்கள் போனாலு
மெல்லாஞ் சிவன்செயலே யென்றிருப்பர்—நல்லார்க
ணாற்றுங் கமலையில்வாழ் ஞானப்ர காசனருள்
சற்றும் பிரியா தவர். (௱௨)

கூட்டுவதுங் கூட்டிப் பிரிப்பதுவு மொன்றொன்றை
யாட்டுவது மாட்டி யடக்குவதுங்—காட்டுவதுங்
காட்டி மறைப்பதுவுங் கண்ணுதலோன் முன்னமைத்த
வேட்டின் படியென் றிரு. (௱௩)

---

102. Wicked karma will not be their lot.
Even if it be, they will simply say
It is all Siva's work,—they
Who never separate ever so little
From the Grace of Jnanaprakas
Who dwelleth in Kamalai, which attracteth the good.

103. Uniting and having united, separating,
Moving and having moved, quieting,
Showing and having shown, hiding,
Think all these to be predetermined
According to the will of the brow-eyed God.

உள்ளதுதான் போமோமற் றில்லா ததுவருமோ
பள்ளமே வெள்ளம் பரவாதோ—கள்ளமாய்ப்
பித்துப்போ லேபிதற்றும் பேதைமட நெஞ்சமே
செத்துப்போ னானோ சிவன். (௱௪)

ஈசன் பலவீன னென்றக்கா லாலயத்தின்
மோசம் வந்ததென்று மொழியலா—மீசனே
யாக்குவது மாக்கி யழிப்பதுவுந் தானானா
னோக்குவதென் யாம்பிறரை நொந்து. (௱௫)

தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம்வந்த தையோ முதல்வனே—தேசத்து
மன்னனைவெறுப் பேனோ வருவினையை யூட்டுவிக்கு
முன்னைவெறுப் பேனோ வுரை. (௱௬)

---

104. Can that which existeth go?
Can what doth not exist come into being?
Will not the flood ever flow into low land?
Roguish, foolish, simple mind that blabbereth as if mad,
Do you think Siva is dead and gone?

105. If we believed the Lord a weakling
We might be afraid of danger to the Temple,
If it is the Lord Himself who buildeth
And having built, destroyeth,
Why should we turn to others and blame them?

106. Supreme One, a danger hath come, alas,
The country and the temples are together tossed.
Shall I blame the country's king for that
Or shall I blame Thee that feedeth the karma
That is to come?

தேக மறந்து திருவருளாய் நின்றுசிவ
போகம் விளையப் புணர்நெஞ்சே—நோக
வருந்தாமற் றீவினையில் வாடாமற் றுன்ப
மருந்தாம லீபிறவா மல். (௬௯)

பூதாதி பாசமன்றோ *பூரணா னந்தமன்றோ
பேதமற நம்முட் பிரானன்றோ—வாதனைகள்
விட்டாற் சுகமன்றோ வென்றுணர்வில் வேண்டுவதுஞ்
செட்டாற் பிறப்புங் கெடும். (௭௰)

* பூரணானந்தமென்றும் பாடம்.

---

69. Forgetting the body, standing as holy grace,
Commune oh ! my heart, to grow Sivabhoga,
That thou may be without suffering pain,
Without withering in wicked deeds,
Without eating the fruits of pain, without taking birth again.

70. Are not the elements and the like bonds ?
Is not perfect joy the end ?
Does not the Lord dwell in us without distinction?
Is not it joy if experience is left behind ?—
If even such hankering queries do not rise in our thoughts,
Then there shall be an end of birth.

அழுந்தாதே பாசத் தநுதினமு மையோ
விழுந்தா லெழுந்திருக்க வேண்டுந்—செழும்பாகை
மீறித் தருமிரத வீட்டின்ப மாமலையே
லேறித் திரும்பலா*மே. (எக)

என்றுஞ் சனனத் திடர்க்கடலி லேழுழ்கிப்
பொன்றுமன மேயுனக்கோர் புத்திகே—ளொன்று
தனிச்சங்குஞ் சேராமற் றற்பரனைச் சேரி
னிச்சங்குஞ் சேரா திரு. (எஉ)

## எ. பணியறுத்தல்

அவரவருக் குள்ளபடி யீசனரு ளாலே
யவரவரைக் கொண்டியற்று மாறு—லவரவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென் னெஞ்சமே
யெல்லாஞ் சிவன்செயலென் றெண். (எங)

* ஏ-வினா.

71. Sink not in bonds, alas, daily;
If thou fallest, thou wilt have to rise.
Can one turn back having climbed up
The great mount of heavenly bliss,
Sweeter by far than rich syrup?

72. Listen, O mind, that perisheth sinking
In the troublous sea of birth forever;
If thou wouldst join the Supreme One
Without sojourning desolate in thy body,
Mix thou not in worldly gatherings.

## 7, SEVERANCE OF ACTION

73. When it is the Lord that doeth all the deeds
Through each as each deserves,
Why judgest then, my heart, the men as good or bad?
Consider all the deeds to be Siva's own.

எங்கே நடத்துமோ வெங்கே கிடத்துமோ
வெங்கே யிருத்துமோ வென்றறியேன்—கங்கைமதி
சூடினான் றில்லையிலே தொந்தொமென நின்றாட
மாடினா னெங்கோ னருள். (எச)

போகம் புவனம் பொருந்துமிட மெங்கெங்குந்
தேகங் கரணந் திரியுமே—யாகிலது
தன்னைநீ யென்று தவியாதே நெஞ்சமே
நின்னையே கண்டருளி னில். (எரு)

ஏதேது செய்திடினு மேதேது பேசிடினு
மேதேது சிந்தித் திருந்திடினு—மாதேவன்
காட்டிடுவ தானவருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்ட மதுவாய் நட. (எசு)

---

74. Whither it will lead me, whither it will lay me down,
Whither it will place me, I do not know
The Grace of Him, my Sovereign
Who weareth the Ganga and the Moon
Who danceth in Tillai with rhythmic jingle.

75. Wherever worlds and enjoyment be
There will the body and karanas roam ;
It being so, take them not to be thyself and suffer
O heart, perceive thyself and stand in grace.

76. Whatever thou doest, whatever thou speakest,
Whatever thou thinkest about,
Never wander from the eye of grace
Which the great God doth show;
Fix that as thine aim and proceed.

எடுத்தவுடற் கேய்ந்தகன்ம மெப்போது மூட்டும்
விடுத்துவிட்டோ மென்பர் விழலர்—விடுத்த
ததுவன்றே யைந்துமல மாறாறு நீத்த
விதுவன்றோ யாந்துறவென் பேம். (எஎ)

எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ வில்லையோ
வவ்வுயிரி னுமொருவ ரல்லவோ—வெளவிப்
பொருகுவது நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதுந் தானே வரும். (எஅ)

முப்பதுஞ்சென் றால்விடியு முப்பதுஞ்சென் றாலிருளு
மப்படியே யேது மறிநெஞ்சே—யெப்பொழுது
மாங்கால மெவ்வினையு மாகு மதுதொலைந்து
போங்கால மெவ்வினையும் போம். (எகூ)

---

77. Karma proper to the body taken will always be fulfilled.
"We have given up deeds," declare the vain.
Giving up all actions is no renunciation.
We call this renunciation : freedom
From malas five and tatvas thirty-six.

78. Is there or not a Lord to protect all beings?
Are we too not of them?
Why covet and wrangle and worry? O heart!
Whatever must come, of itself will come.

79. It will be dawn when thirty naligais have passed;
It will be dark when thirty more have passed.
It is so with everything, know thou, my heart.
In propitious times all deeds will come to fruit,
In unpropitious times all deeds will come to naught.

ஆவலுற்றி டுஞ்சகலத் தாவதுவு மாங்கவரே
கேவலத்தின் மூழ்கிக் கிடப்பதுவு—நாவரற்ற
வில்லாத சுத்தத் திருப்பதுவு மிம்மூன்று
மில்லான் செயலென் றிரு. (௮௰)

பாசஞ் சடமுயிரோ தானாகப் பற்றியா
வீச னிரண்டு மிணைத்தாட்டிப்—பூசலென்றுஞ்
செய்பவனே தானே திரும்பியருள் செய்யாம
லுய்பவர்க ளுண்டோ வுரை. (௮௧)

முற்றின்ப மாமருளின் மூழ்குவது மோகமிகு
சிற்றின்ப மாமருளிற் சேர்குவது—முற்றிங்
கறிந்தானன் னெஞ்சே யகிலாண்ட மெங்குஞ்
செறிந்தான் செயலே தெளி. (௮௨)

---

80. Our being in the sakala state wherein we feel desires,
Lying immersed in the kevala state,
And remaining in the suddha state,
Wherein the tongue knoweth no blabbering,
All is the work of Him who is beyond these three states.

81. The bond is insentient and the soul
Knoweth not to cling of itself to the bond.
It is the Lord that linketh and moveth the two
And causeth strife always.
If He Himself bestow not His Grace again,
Say, who is there who can attain salvation?

82. My good heart, know this;
Plunging in the grace that is perfect joy
And mingling in the grace of worldly joy that stupifies
Are both the work of Him who knoweth all,
Who is immanent in all the universe.

என்னிடத்தி னின்செயலே யில்லையென்றால் யாதுறினு
நின்னிடத்தில் யான்வேண்ட னிச்சயமே—யென்னிடத்தி
லின்மை யுயிர்க்குயிர்நீ யின்மை யிருந்தியற்றி
னன்மைதின்மைக் கேதுவோ நான். (௮௩)

நாம்பெரிய ரென்னுமதை நாடா தடக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றியிடு—நாம்பெரிய
ரென்பார் சிறிய ரிவரலா லிவ்வுலகிற்
றுன்பார் சுமப்பார்கள் சொல். (௮௪)

---

83. If in me there were no deed of Thine
Whatever befall, I must pray of thee, forsooth.
When it is not but that Thou dwellest in me
And workest as the life of my life,
Am I the cause of acts, good or bad?

84. They are really great who seek not the name of greatness,
Who restrain themselves in modesty, the Vedas proclaim;
They are really small who boast that they are great;
Say, who in this world have to bear suffering
If these have not?

கட்டமாங் காயங் கலையனைத்துங் கற்றாலு
மட்டமா சித்தி யடைந்தாலு—மிட்டம்
பரம சுகமே பதியாத போது
திரம சுகமே தெளி.

மனவாக்குக் காயமுயிர் மன்னியசைப் பானு
மனமாதி போகமளிப் பானு—நனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி கூட்டிடுவா னும்பிறப்பி
லாட்டிவிடு வானு மரன். (௮௬)

---

85. Though one doth learn all the sastras
And achieve the eight great siddhis
While still in the body, the seat of troubles,
If one's desire be not set on the Supreme Bliss
One's lot will certainly be unhappiness, understand.

86. It is Hara who dwelleth in the mind
Speech and body and soul and moveth them
Who giveth enjoyment of food and like things
Who uniteth the soul in states like wakefulness
Who giveth deliverance to it,
Or maketh it travail in births.

முன்னைவினைக் கீடா முதல்வ னருணமைக்கொண்
டென்னவினை செய்ய வியற்றுமோ—வின்னவினை
செய்வோந் தவிர்வோந் திரிவோ மிருப்போமிங்
குய்வோ மெனும்வகை யேது. (அஎ)

ஊட்டும் வினையிருந்தா லுன்றனை யுன்பதத்தைப்
பூட்டிப் பிடித்துப் புசிப்பிக்கும்—கேட்டுத்
திரியாதே வந்துதில்லைத் தெய்வமே யென்றென்
றெரியாதே நெஞ்சே யிரு. (அஅ)

---

87. Whatever the deeds will be that the grace of the Supreme
Shall arrange to be done through us
In accordance with our karma in the past; who knows?
What scope have we to say,
"We'll do this work, We'll not do that
We'll roam about or remain here
We will save ourselves" and so on?

88. If there be the karma to be undergone, as sure as you are
It will bind your feet down to your suffering.
Neither wander about questioning
Nor burn in anguish repeating "God of Tillai, oh!"
Peace, be still, my heart.

## அ. துறவின்பகுதி

துரத்தியுன்னை யாசை தொடராம லென்றும்
விரத்தியினா லாங்கவற்றை விட்டுப்—பரத்திலன்பு
செய்யடா செய்யடா சேரப்ர பஞ்சமெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய். (௱௭)

அனைத்துலகு நம்பா லநுக்கிரகம் பெற்றெ
னனைத்துலகு நம்வசமா யாவெ—னனைத்துலகுங்
கொண்டாடி லென்னைவினைக் கொத்தறுத்துப் பேரின்பங்
கண்டாடி லன்றோ கதி. (௱அ)

---

### 8. ON ASCETICISM

107. That desires may not drive and pursue thee
Leave them always with disgust,
Love the Supreme, I say, love Him.
All the universe is lie, lie, lie, I say.

108. What though the whole world be obliged to us for favours,
What though the whole world come into our possession?
What though the whole world sing praise unto us?
Salvation cometh only - doth it not?
When the karmic cluster is cut off,
When the great Joy is found and bathed in.

அறிவிழந்து நின்றசுக வானந்தத் துள்ளே
குறியிழந்து நின்று குலாவிப்—பிறியா
திருந்தாற் பிறப்பறுமோ விச்சைமால் கொண்டு
திரிந்தாற் பிறப்பறுமோ செப்பு. (௱௯)

எத்திசையு மெவ்வுலகு மெத்தொழிலு மெப்பயனு
நித்தியமென் றெண்ணி னிலையாதே—புத்தியினாற்
கண்ணாடி யிற்றோன்றி மாய்ந்துவிடுங் காணிவற்றைக்
கண்ணாடி யிற்கனவிற் காண். (௱௰)

---

109. When will the birth be cut off, say.
When one, having lost perception through the body
Dwelleth without separation mingling in the blissful joy
That standeth beyond when all knowledge is lost,
Or when one roameth about maddened with desires?

110. Every quarter, every world, every deed, every consequence
Thinkest thou eternal ?—No, they are transient.
They appear like shadows in a mirror
By the working of thy mind and vanish.
Consider them as things seen in a mirror or dream.

எத்தனைதான் கற்றாலு மெத்தனைதான் கேட்டாலு
மெத்தனைசா தித்தாலு மின்புறா—சித்தமே
மெய்யாகத் தோன்றி விடுமுலக வாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்றாத போது. (௱௰௧)

மின்போலத் தோன்றி விடுமுலக வாழ்வனைத்து
மென்போ லிகடி ரமென் றெண்ணுவார்—தன்போத
மில்லார் சிவபோக மென்று மருந்தியிடு
நல்லார் திரமிதுவென் னார். (௱௰௨)

---

111. However much one may learn,
However much one may hear,
However much one may accomplish,
Joy will not come, O mind,
When all worldly life, that seemeth so real
Is not realised untrue.

112. All worldly life
Like a lightning flash,
Fools like me take
To be forever lasting.
But those free from self-born knowledge,
The good that always enjoy Sivabhoga
Never say that it is everlasting.

தேசமூர் பேர்காணி சீர்வரிசை சாதியெனு
மாசையா னெஞ்சே யலையாதே—நேசப்
பொருப்பானை நின்னறிவிற் போக்கு வரவற்
றிருப்பானைப் பார்த்தே யிரு. (௱௰௩)

ஆகம் பகையாவ தன்றிப் பகையுண்டோ
மோகந் தவிர்ந்த முனிவோர்க்கிங்—கேக
னிருவ ரறியாத வீசனரு ளல்லா
லொருவர் துணை யுண்டோ வுரை. (௱௰௪)

---

113. Country, town, name, acres,
Felicity, rank and caste,
In desires such as these
Wander not, O heart,
Remain steadfastly gazing—
On Him, the mountain of love
That dwelleth in thine intelligence
Without going in or coming out.

114. To the wise, free from delusion,
Is there any foe except the body?
Is there any help except the Grace
Of the Lord, the One Unknown to the two Gods?

அளவிலாச் செல்வத் தடைந்தாலு மாகத்
தளவிலாச் சித்திகளுண் டாயு—மளவில்கலை
யாய்ந்தாலு மென்னைசுக ரல்லார் சிவானந்தந்
தோய்ந்தார்க ளன்றோ சுகர். (௱௰௫)

ஆகாத காரியஞ்செய் தாஞ்சுகமு மாங்கதனாற்
போகாத துக்கம் பொருந்துவது—மோகோ
வுரைக்கிலணு வுக்கு முயர்ந்தமா மேரு
வரைக்கு நிகரா மதி. (௱௰௬)

---

115. What though they get at limitless wealth
And achieve limitless powers in the body
And study limitless forms of art?
They are not the Happy.
They alone are the Happy
Who are immersed in Siva's bliss.

116. When you compare the pleasure gained
By doing a wicked deed
To the never - leaving sorrow
That springeth from that deed,
Oh, Oh, it is like the atom
To the great and lofty Meru.

பொய்யில்வருந் துன்பம் புகுந்தறிந்தும் பூரணமா
மெய்யில்வரு மின்ப விளைவறிந்து—மையோ
தெளியாத தென்னநலந் தீங்குகண்டு சற்றுங்
களியாத தென்னமயக் கம். (௱௰௭)

ஆகஞ் சிறைச்சாலை யக்கரணங் காவலாள்
போகம் புவனம் பொருந்துமிட—மோகோ
விதனுட் படுமுயிர்கட் கீடேற்றஞ் செய்வா
னதனுக் கிறைவ னரன். (௱௰௮)

---

117. Having known by experience,
The pain that cometh from falsehood,
And fully known the harvest
Of happiness coming from truth,
Alas, how can they be without understanding?
And having seen the good and evil,
What illusion keepeth them from rejoicing even
a little?

118. The body is the prison-house
The karanas are the guards
The world is the appointed place of suffering
Oh, oh, to the souls shut up in this prison,
Its Lord, Hara, is the deliverer.

அதிட்டான மீச னருளன்றி மற்றை
யதிட்டான மெல்லா மநித்த—மதிட்டானம்
பொய்யென் றறியாமற் பூதலத்து நெஞ்சமே
மெய்யென் றுழல்வதெல்லாம் வீண். (௱௰௯)

நின்னை மதிக்கி னினக்கதிபர் செல்வநினை
நின்னை வறிஞனென நீநினையி—னின்னிற்
சிறியார் வறுமைநினை சிந்தைபுக வென்றுங்
குறியா விடும்பைதுக்கங் கோள். (௱௨௰)

---

119. Except the support of the Grace of the Lord
All other supports do not endure.
Not realising their unreality,
To consider such supports as real in this world,
And fret about them, is all futile, O heart.

120. If thou regard thyself great
Think of the wealth of thy superiors;
If thou thinkest thyself poor
Think of the poverty of those humbler than thou.
Then suffering and sorrow will never
Think of entering thy mind.

## ௯. அறிவோர் புகழ்ச்சி

அநித்தியத்தை நித்தியமென் றாதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி மருவார்—தனித்திருந்து
மோனந்த மாஞ்சிவத்தின் மூழ்கி மலத்தையறுத்
தானந்த மாயழுந்து வார். (௱உக)

தாக மறந்து சதுர்மறந்து தான்மறந்து
தேகமறந் தட்டமா சித்திமறந்—தாகத்தின்
வந்ததறி யாதிருந்து மாறாச் சிவானந்தஞ்
சந்ததம்வாழ் வார்க்கார் சரி. (௱உஉ)

---

### 9. IN PRAISE OF THE WISE

121. They mix not nor mingle with wicked men
Who uphold the fleeting as everlasting.
Keeping alone, immersed in Sivam, the end of silence
Cutting the malas off, they plunge themselves in Joy.

122. Who can be the equals of those who,
Forgetting the thirst of desires,
Forgetting their own ingenuity,
Forgetting the I, forgetting the body,
Forgetting the eight great attainments,
Remaining without feeling the sojourn in the body,
Always live in the unchanging joy of Siva ?

உள்ளமல நீங்கி யொழியாச் சிவானந்த
வெள்ளந் துளைந்து விளையாடும்—பிள்ளைகா
ளத்துவித மானீர்நம் மாகம் பிரிந்தோமென்
றித்துவித மெண்ணுவா னேன். (௱௨௩)

அறிவா யறிவிழப்பி லாகின்ற வின்பச்
செறிவாய்ச் சுகமாய்த் தினமும்—பிறியா
திருந்தங் கதீதமா யேய்ந்தசிவா னந்தம்
பொருந்துவார் முத்தரெல்லாம் போய். (௱௨௪)

---

123. O, Ye children! freed from the malas of the mind
Who gambol plunging in the unceasing flood of
Sivananda
And have become non-dual,
Why think ye of this dualism
That ye have separated from your bodies?

124. Becoming intelligence, becoming that intensity of joy
That cometh with the loss of consciousness of
knowledge,
Becoming bliss, all muktas go,
And, ever remaining without severance, join
With Siva's joy that is above all.

## ௧௰. மடவோர் பழிப்பு

தனையறியா ரீசன் றனையறியார் பாச
வினையறியா ரானந்த மேவார்—தனையறியுஞ்
சிட்டர்தமக் கில்லாத தீங்குரைப்பர் பொல்லாத
துட்டர்தமக் குள்ள தொழில். (௱௨௫)

தன்னை யறியார் தலைவன் றனையறியார்
முன்னை வினையின் முடிவறியார்—பின்னைக்
குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவர்க ளையோ
தெருக்க டனிலே சிலர். (௱௨௬)

---

### 10. CENSURE OF THE FOOLISH

125. They know not the soul, they know not the Lord,
They know not the action that binds,
They gain not the joy, they slander the good
That have the knowledge of the soul realised.
Such is the work of very wicked men.

126. O! some there are, wandering in the streets,
Who call themselves gurus, alas,
Who know not the soul,
Who know not the Lord,
Who know not the result of the actions of the past.

வாயுவெளி தானசையா வாறிருந்தாற் போலென்று
நீயதுவும் பூரணமாய் நிற்கவே—காயத்துக்
குள்ளுள்ளே தான்சிவமென் றுற்றுப்பார்ப் பாரூசிப்
பொள்ளலால் வான்பார்ப்பார் போல். (௱௨௭)

கற்கவிடர்ப் பட்டுமிகக் கற்றவெல்லாங் கற்றவர்பாற்
றற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ—நற்கருணை
வெள்ள மடங்கும் விரிசடையார்க் காளாகி
யுள்ள மடங்கவல்ல வோ. (௱௨௮)

---

127. Like ether and air that remain unmoving
While It and thou ever in perfection stand,
Those who closely search thinking
That Sivam could only be within the body
Are like those that look at the sky
Through the eye of a needle alone.

128. Is all that has been learnt
With so much of trouble in learning
Simply for barking like a dog
In disputations with the learned?
Is it not that one may become the servant
Of Him with the spreading locks
Which hold the flood of divine grace,
That one may become tranquil in mind?

அறியார் கனவினிலு மானந்த ரூப
மறிவார் தமையு மடையா—ரறிவார்கட்
கில்லாத தீங்கே யெடுத்துரைப்பா ரிவ்வுலகிற்
பொல்லார் தலையிற் பொறி. (௱உ௯)

### ௧௧. பொதுநிலை

நீதியிலா மன்ன ரிராச்சியமு நெற்றியிலே
பூதியிலார் செய்தவமும் பூரணமாஞ்—சோதி
கழலறியா வாசானுங் கற்பிலருஞ் சுத்த
விழலெனவே நீத்து விடு. (௱௩௰)

---

129. They do not know the form of joy
Even in their dreams;
They do not mix in the company of those
Who have known such form;
They slander the wise and talk about
The evils they never did have—
Such is the lot written on the head
Of the wicked in this world.

### 11. GENERAL CONSIDERATIONS

130. Countries ruled by unjust kings,
Austerities of those without ashes on their brows,
The Guru that knoweth not the feet of the Light that is perfection,
And people without purity—
Abandon these as utterly profitless things.

ஐந்தறிவாற் கண்டாலு மாரேது சொன்னாலு
மெந்த விருப்புவெறுப் பெய்தாலுஞ்—சிந்தையே
பார விசாரத்தைப் பண்ணாதே யேதொன்றுந்
தீர விசாரித்துச் செய். (௱௩௧)

பரபரக்க வேண்டாம் பலகாலுஞ் சொன்னேன்
வரவரக்கண் டாராய் மனமே—யொருவருக்குந்
தீங்கு நினையாதே செய்நன்றி குன்றாதே
யேங்கி யிளையா திரு. (௱௩௨)

---

131. Even though thou hast perceived a thing with all the five of the senses,
Whoever it may be who sayeth, whatever it may be he sayeth,
Whatever thing thou likest or dislikest may happen
O mind, feel not greatly worried.
Do everything after due consideration.

132. Be not agitated, I tell you many a time
Perceive and search, O mind, by grades as time goes on,
Think no evil to any one,
Be not wanting in gratitude,
Languish not away in dejectior

மிகுத்தகுலஞ் செல்வத்து மேவுவது மத்தைப்
பகுத்துப்பொய் யென்றுவிடும் பாங்குந்—தொகுத்து
விரித்தானன் னெஞ்சே மிகுவா ரணத்தை
யுரித்தான் செயலென் றுணர். (௱௩௩)

ஆறாறு தத்துவம்வைத் தத்திலுறை மூர்த்திகள்வைத்
தேறா மலபாக மேறவே—மாறாம
லுன்னைவிடா தாள்வா னுனைக்கேட்டோ நெஞ்சமே
யென்ன விசார மெமக்கு. (௱௩௪)

---

133. That any one desireth for noble birth or wealth
Or discardeth them knowing their nature to be unreal,
To put it briefly, my good heart, understand,
It is all the work of Him who flayed the proud elephant.

134. Having ordained the thirty - six tatvas
And appointed the spirits that dwell in them,
He, who is thy Lord, never changing, never leaving thee,
Maketh the malas, that would not ripe, mature.
Doth He do so, consulting thee?
Why then worry ourselves, O heart?

தானோ வசத்தல்ல வென்றறிந்தாற் றாரணியி
லேனோ பிதற்றிடுவ தேழைநெஞ்சே—தானே
யிறவா ததுதா னிறக்க வருளை
மறவா திருசிவமா வை. (௱௩௫)

எற்றாத வையா யிருப்பதுவு முண்மயக்க
மாற்றாது தீரென் றரற்றுவதுந்—தோற்றாது
தோற்றுவது முன்னைச் சுகபூ ரணனென்று
தேற்றுவது மீசன் செயல், (௱௩௬)

---

135. If thou knowest that thou art not the insentient
Why babblest thou, poor heart?
Forget not the Divine Grace; then
The ignorance that would not perish by itself will be destroyed;
And thou shalt then become Sivam.

136. That thou remainst identifying thyself
With the objects that cannot lift thee up,
That thou brookest not thine inward confusion
And criest to have it taken away,
That inconceivable things are conceived in thy mind
To comfort thee by saying that thou art perfect joy—
Are all the work of the Lord.

அன்றே யரனணுக்கள் பாசங்க ளைந்தொழில்க
ளன்றே சிவனு நடுவனே—சென்றருளி
னிற்கச் சிலர்சிலர்க ணீணரகிற் பூதலத்திற்
சொற்கத் திருப்பதென்னோ சொல். (௱௩௭)

ஆசையறாய் பாசம்விடா யானசிவ பூசைபண்ணாய்
நேசமுட ளைந்தெழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய். (௱௩௮)

---

137. Eternally there dwell in panchakshara, Hara,
The atom-like souls, the bonds and the five - fold deeds of grace;
And well doth Siva occupy the middle.
While some do go and stand in Grace,
Why, say, are some in extensive hell,
On earth or in the transient world of the Gods ?

138. Thou dost not cut off thy desires,
Thou dost not sever the bonds,
Thou dost not adore Siva in desirable worship,
Thou dost not meditate with love
The holy letters five. Fie on thee!
Thou dost not leave anger,
Thou dost not chant the Thirumurais,
O mind, why then this arrogant prate?

தில்லைவனங் காசி திருவாரூர் மாயூர
முல்லைவனங் கூடன் முதுகுன்ற—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும். (௱௩௯)

## தனி. கட்டளைக் கலித்துறை

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.

---

139. Tillai-vanam, Kasi, Tiru-arur, Mayavaram
Mullai-vanam, Madura, Mudu-kunram,
Nellai, Kalar, Kanchi, Kalukkunram, Maraikkadu
Arunai, Kalahasti, Vanchiam— O mind, speak of these
And thine shall be bliss.

140. They study the truth of Pati, Pasu, Pasam,
And having studied and understood,
They dislike all worldly life,
They rest from the toil of learning and hearing,
They plunge in the ocean of Siva's joy
With the loss of one and two,
The faithful servants of Jnanaprakas.

கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
வெனக்கு முடற்கு மெனதிச்சை யோவினங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையின் ஞானப்ர காச சிதம்பரவின்
றுனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே. (௱௪௧)

எல்லா முனது செயலென் றறிந்து மெனதுளத்திற்
பொல்லாத சங்கற்ப மேன்வரு மோபுர மூன்றெரிக்க
வல்லாய் கமலையின் ஞானப்ர காச வரதவிது
சொல்லாய் கரண மயக்கமன் றோவென் றொழிலல்லவே.

---

**141.** Hath anyone ever consulted the bullock's wish
About the ponderous load he hath to carry ?
Is it my wish that matters
About the nature of the body I get ?
Thou that wert filled with wrath
Against the cities of Thine enemies,
Kamalai Jnanaprakas ! Chidambara !
Whatever be Thy wish to-day
Graciously proclaim accordingly.

**142.** Knowing that all is Thy deed,
Why should this wicked resolve sprout forth in my mind ?
Thou Strong One, who destroyed the three cities,
Kamalai Jnanaprakas! Thou bestower of gifts!
Answer this. Is it not of the confusion caused by the karanas ?
It is certainly not my deed.

## கலிவிருத்தம்

அவரவர் வினைவழி யவரவர் வந்தன
ரவரவர் வினைவழி யவரவ ரனுபவ
மெவரெவர்க் குதவின ரெவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமையுணர் வதுவே. (௱௪௩)

சிவபோகசாரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் திருவடி வாழ்க.

---

143. Each one did come accordant with his actions,
Each one experienced accordant with his actions,
Who helped whom? Who helped not whom?
But the austere think of knowing themselves.

THE END

The Sacred Hall of Wisdom

*Blessed be the sacred feet of*
*Sri Guru Jnanasambandhamurthi.*

## வாழ்த்துப்பா

கதிவாழ்க வேதநல் லாகமம் வாழ்கநற் கண்மணியுன்
பதிவாழ்க சைவந் திருநீறுங் கண்டியும் வாழ்கவருட்
குருவாகும் நின்றன் றிருக்கூட்டம் வாழ்கநற் கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த தேசிகனே.

---

Blessed be the Moksha, Vedas and Agamas great;
Blessed be the Lord enshrined in our hearts pure;
Blessed be Saivam, ashes and rudrakshas;
Blessed be the congregation attached to thee;
Blessed be the wide streets with mansions high
Where cows march in long and stately sight;
O Teacher, known as Jnanasambandha,
Shedding thy divine grace in Dharmapura.

# GLOSSARY

1. சித்தி—Siddhi : success, attainment, realisation, final liberation. The eight supernatural powers attainable by Yoga: anima—becoming as tiny as an atom; mahima—becoming as big as the Meru; laghima—becoming lighter than air; karima—becoming harder than an iron or rock; prapthi—working miracles; prakariyam—realisation of every kind of worldly bliss that one wishes for; isatvam—powers to create, keep and destroy; vasitvam—attracting everything to oneself and influencing the same as desired; and mukti—liberation from bonds of birth and merging in the Supreme.

தென்கமலை—The south or beautiful Kamalai.

2. அருவம்—Formlessness, incorporcity, invisibility—Sivam, Sakti, Nadam and Bindu.

அருவுருவம்—Formless form, the visible and invisible visible form which can be said to be no form as the Sivalinga or a flood of light; Sadasiva.

உருவம்—Organised body, shape, figure: Mahesvara, Rudra, Vishnu and Brahma.

அமலம்—That which is spotless, immaculate; purity, cleanliness.

3. தவம்—Ascetic practices, austerities.

சிவதவம்—Charya, kriya and yoga.

என்போல்—Like me, in my form, in human shape.

முத்தி—Freedom, liberation.

கத்தன்—Karta, lord, author, creator.

அத்தன்—Father, lord.

4. துரியம்—The fourth of the five states of the soul in which it is in the navel with prana and is cognizant of itself alone, state of entire quiescence.

5. அமுதம்— Ambrosia, nectar, final liberation.

6. உள்ளும் புறம்புமாதல்—As the light of wisdom inside and as God riding on the bull.

The outer manifestation is of three kinds: (1) தன்மை-Uttama—Paripurna: perfection; (2) முன்னிலை-Madhyama being as Ichcha, Jnana and Kriya, (3) படர்க்கை-Prathama being as Manas, Buddhi, Chitta, Ahankara, A U M., Bindu and Nada; Brahma, Vishnu, Rudra, Mahesvara and Sadasiva.

7. மருள்—Ignorance, the work of anava mala; bewilderment, the work of Maya mala.

8. விழியாதிருந்து விடல்—புவன போகங்களில் மயங்காமை—Not being tempted by worldly things.

9. பொய்—Asat, Achit; whatever is not permanent; that which is illusory, unsubstantial, fleeting; lie, that which misleads; that which is unreal. This technically connotes the idea that all those are unreal which are not what they seem to be; all that are seen or perceived howsoever by the sense of man and all that assume perceptible shapes or forms are transitory and changeable. Everything changes like this until the ultimate cause is reached which alone is termed மெய்.

10. மெய்—Sat, chit, *vide*. 9, that which is true, eternal, real.

வீற்றிரு—To appear enter and dwell. தோன்றிப் புகுந்து இருத்தல்.

11. ஓங்கு—Grow, increase.

தூங்கு—Commune, be lapped, sleep everlastingly; commune with Grace.

12. தற்போதம்—Love of self, feeling of self, recognition of the ego; self-conceit, arrogance; consciousness. This

word may also mean self-knowledge, knowledge of the self and the deity, intuitive knowledge, inherent and eternal knowledge as possessed by the deity.

13. தேவு—God as immanent in the universe can be worshipped in the forms of worship; but, God who is transcendental is realised only by dint of the infinite wisdom which His Grace awakens in highly evolved souls.

14. கூப்பிடு—Call out, cry hoarse.

15. இரு—To remain, practise, realise.

16. உண்மை வை—Keep or reserve the truth, reveal the truth to such சாதன சதுட்டய முற்றின அதிகாரிகளுக்கு உபதேசிக்க.

17. வெளி—Space, space infinite.

18. அகன்ற—Apart from, transcending.

19. அத்துவிதம்—Advaita, non-duality, distinct or non-different union. It is not here the monism of one who holds the doctrine of ekanmavadam.

According to Saiva Siddhanta doctrine, God and the soul are distinct entities but because of their union they are not dual. Their advaitic relationship is illustrated by the following similies of Introductory verse of Sivajnana Swamigal's commentary on Siddhiar:—

A. ஒன்ருய் நிலைத்தல்

(1) பண் இசை—Tune and sound; சிவனுகிய சித்தன்ருய்ச் சித்தின் பேதமாகிய சீவன் சிவனையின்றித் தனித்துநில்லாமை.

(2) பரிதி மதி—The sun and the moon; நிற்றல் இல்லையாயினும் பொருளால் வேறுண்டு.

(3) தில தயிலம்—The Til seed and oil; சீவனை விட்டுச் சிவனைப் பிரித்தறிய முடியாது.

B. வேறாய் அறிதல்

(4) தீ இரும்பு—Fire and iron; உயிரின்வேறாய்ச் சிவன் நிற்பன்.

(5) பாணி உப்பு—Water and Salt; தனித்து நிற்பன்.

(6) விண் அநிலம்—Ether and air; உயிர் எக்காலத்தும் சிவனைவிட்டுப் பிரிந்திராது.

C. உடனாய் அநுபவித்தல்

(7) உடல் உயிர்—Body and Soul; இறைவன் உயிருடன் நின்று செலுத்துவன்.

(8) நீர் நிழல்—Water and shadow; எக்காலும் பிரிப்பின்றிப் பரவி நிற்பன்.

(9) உச்சிப்பளிங்கு—Sunlight and crystal; இறைவனோடு உயிர் கலந்து விஷயங்களை அறியாதிருக்கவும் கூடும்.

(10) பகல் விளக்கு—Daylight and lamp; உயிர் தற்போதம் கெட்டு நிற்கும்.

(11) பால் நீர்—Milk and water; தன் இன்பம் முழுதும் உயிருக்காக்கித் தன்னுள் அடங்கிநிற்கச் செய்வன்.

(12) கண் இரவி—The eye and the sun; உயிர் சித்தாயினும், சிவனையின்றி என்றும் அறியாது.

(13) உணர்வு ஒளி—Consciousness and the eye. வேறிடத்திருப்பதில்லை; ஓரிடத்திற் கலந்து நிற்கும்.

20. தத்துவம்—Coats or vestures of different textures at different times and stages to the soul undergoing evolution with interest to rid itself of its coil,—anava. Thirty-six tatvas *vide* notes on Siddhanta: Reals.

23. தாயுமானவர் குருமரபு—(Siddhiar, Sut. VIII. St. 30.)

24. இரவு—the kevala state.

பகல்—the sakala state.

இரவு பகலற்ற இடம்—the suddha state.

நேதி பண்ணல்—Analysing and rejecting whatever is seen is not thou. This is the process of analysis wherein all that are seen are taken one after another and examined and it is found and realised that neither God nor soul is found in any of them.

25. கரணம், அந்தக்கரணம்—Antah-karana—inner seat of thought, feeling and volition, consisting of four aspects: chittam as considering, manas as doubting, ahankaram as wrongly concluding and buddhi properly determining.

26. முப்பொருள்—Three varieties, categories of Saiva Siddhanta, Pati, Pasu and Pasam—*Vide.* note on Saiva Siddhanta.

27. மும்மலம்—Three malas: anava, maya and karma. Mala generally refers to anava mala which is called the darkest, the fast and the last fetter of the soul. இருண்மலம்.

30. Three grades in the realisation of Siva-tvam-asi are explained here.

31. The three factors of knowledge, tribuddhi: Jnatru Jnanam and Jneyam—the knower, knowledge and object of knowledge are referred to here.

32. சிற்பரன்—God as transcending human understanding; Supreme Being, the Highest.

33. நிஷ்டை—Religious meditation which has become nature by long practice, union.

அநுபூதி—Perception, apprehension, realisation.

34. அநாதி—That which has no beginning, which is immemorial: God who has no beginning, Siva.

35. கரணம்—Cognition; அந்தக்கரணம்.

38. தநு—body, கரணம்—manas etc, புவனம்—worlds, போகம்—enjoyment.

அத்துவாக்கள்—Ways; physical envelopes of the soul through which it ascends. Sabda, mantra—pada—varna ; —artha, tatva, bhuvana and kalai.

39. காட்சி—Perceptive consciousness. அவஸ்தை; *vide* Note—Siddhanta.

41. நிலை—State, place.

48. The author maintains the Saiva doctrine refuting the maya-vadins.

44. Guru Jnanaprakas was also known as Chidambaranath.

46. சத்து—The existent.
சித்து—Intelligence.
ஆனந்தம்—Happiness.

50. வெறும்பாழ்—வெட்ட வெளி—The state where all kinds of form-perception or conscious experience have gone and where truth and intelligence only are existing in their nascent state.

55. திரிகரணம்: மனம், வாக்கு, காயம்—Mind, speech and body.

59. தானெல்லாமாயது—Here Maya.

63. சும்மா இருத்தல்:—*vide.* Maunam.
சுட்டறிவு—Cognition by the senses.

65. சிவயோகம்:—*vide.* விநாயக புராணம்—வியாச ருபதேசம் பெறுபடலம்.

சிவபோகம்—The state of the fullest communion with God's Bliss and standing as Himself.

66. யோகசமாதி, சகச நிஷ்டை—*vide.* glossary. St. 33 of தாயுமானர். ஆசையெனும் 2 காந்தமதை.

70. பூதம்—Elements.

73. பணி—Work, service.

83. சடம்—Matter × சித்து.

திரும்ப—Again : in return.

101. சும்மா—With reason, cause.

104. Stanzas 104-106 refer to some religious disturbances due to non-Hindu invasions in South India during the author's time. These stanzas were chanted by Sri Thiruvambala Desigar, seventh in succession from Guru Jnansambandhamurthi and some miracles were performed when some harm was about to be done to the Mutt.

107. The author speaks of the Saiva sanyasa which is the love of God.

108. The five acts of Grace are :—

சிருஷ்டி—Creation.

ஸ்திதி—Protection.

ஸம்ஹாரம்—Destruction.

திரோபவம்—Observation. Obscuration.

and அநுக்கிரகம்—Salvation.

109. குறி—Indication, mark.

119. அதிஷ்டானம்—Support, place, abode.

121. நித்தியம்—Sat, that which is eternal, real, changeless.

அநித்தியம்—Asat, that which is transient, unreal, changing.

மோனம்—Silence, quiescence, peace, tranquility of Thayumanavar. Asai enum St. 2.

123. சிவாநந்தம்—சிவபோகம்.

124. அதீதம்—That which has gone beyond.

முத்தர்—The liberated.

பெத்தர்—The souls in bondages.

127. This points out the superiority of Jnanam over Yoga as Jnanam comprehends the infinite in the soul and Yoga comprehends it through the body.

124. சங்கற்பம்—Mental resolve.

# சொக்கநாத வெண்பா

# - SOKKHANATHA VENBA -

உ

கணபதி துணை

# சொக்கநாத வெண்பா

ஆடரவஞ் சூழ்மதுரை யம்மானே யன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே—நீடுபுகழ்
மென்மேலு மென்றனக்கு மேவியிடப் பொல்லாத
வென்மேல் வினைகெடுப்பா யே. (க)

புண்கட்டு தோலைப் புதுக்கி மயக்கமுறக்
கண்கட்டு வித்தைபோற் காட்டுவாய்—பண்கட்டுப்
பூணுவேன் றன்னையின்ப பூரணத்திற் பூணவரு
டாணுவே சொக்கநா தா. (உ)

---

### GANAPATI OUR SUCCOURER

# *SOKKHANATHA VENBA

1. Lord of Madura, girdled by the dancing serpent, Sovereign that merrily goeth forth to meet Thy devotees, destroy my wicked action so that enduring glory may come to me increasingly.

2. Renewing the rind that wrappeth the sore, Thou showeth a delusive jugglery. Grant that I who am tied in bonds may dwell in the prefection of joy, O everlasting Sokkhanatha !

---

*Sokkha Natha-Siva at the shrine of Madura, Pkt. Sokkha, Sk Svaccha—Purity, Excellence; Beauty. Natha-Lord ; The Supreme Being-Siva.

ஏடாரு நாரியரை யையோ யமன்பிடிக்கும்
பாடா விதியென்று பாராமற்—கேடாரப்
பூண்ட*வா பாதனென்று போடா தெனையருளி
லாண்டவா சொக்கநா தா. (௩)

*ஆபாதன்—நழுவுகின்றவன்.

காக்கைநரி ஞாளி கழுகுபருந் துக்கிரையா
மாக்கையினை யானென் றலையாமல்—வாக்குமன
மெட்டாத வீட்டி லெனைக்காட்டு துட்டருளந்
தட்டாத சொக்கநா தா. (௪)

பஞ்சமா பாதகனை யாண்டபுகழ் பார்மீதிற்
கொஞ்சமா வீறுபுகழ் கூறுமே—வஞ்சமே
பூண்டளவில் பாதகஞ்செய் பொல்லாத நாயேனை
யாண்டளவிற் சொக்கநா தா. (௫)

---

3. Scorning me not as a renegade, who, without rejecting the flower-bedecked women as evil fates meetest for death, has indulged fully to his ruination, Thou, Sokkhanatha, hast condescended to make me Thy servant, in Thine infinite Grace.

4. Sokkhanatha that art beyond the feel of wicked hearts! show me into the house beyond the reach of word and mind that I may not roam about confusing that my body, a prey for the crow, jackal, dog, vulture and kite, is myself.

5. When Thou savest me, a deceitful dog doing countless wicked acts, Thy fame shall spread so much on earth that the fame of Thy having redeemed the man of fivefold heinous crimes would shrink into littleness, O Sokkhanatha !

வறிஞர் தமையொக்க வைக்குமன் னர்போல
வறிஞர் தமையாள்வ தன்றிப்—பொறிபுலனால்
வெம்புவேன் றன்னை விடுத்தாள்வ தேபாரஞ்
சம்புவே சொக்கநா தா. (௬)

என்னா லுனையடைய வல்லே னெனிலிடரி
லிந்நா ளளவு மிருப்பேனோ—பன்னாகம்
பூண்டவா வேணிப் புனிதா மதுரைநக
ராண்டவா சொக்கநா தா. (௭)

எல்லாமும் வல்லசித்த ரென்றக்கா லென்னுடைய
பொல்லாக் *கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கரா வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா. (௮)

*கருத்து—வினையென்பதும் பாடம்.

---

6. It is Thy burden not merely to save the wise, but also to release and save me, scorched as I am by the organs and the senses, even like kings who show equal consideration to the poor, O Sambhu, Sokkhanatha !

7. If it were in my power to reach Thee, would I remain in pain so long, Thou that wearest the serpents on Thy locks, O pure One, Lord of Madura, Sokkhanatha?

8. If Thou art the siddha for whom nothing is impossible canst Thou not drive off my wicked thoughts*, Thou that wearest the angry serpents on Thy locks, O pure One, Sankara of Madura, Sokkhanatha ?

---

[*Reading: deeds.]

பேசாத பூதி பிறக்க வெனதுளத்தி
லாசா பசாசை யகற்றுவாய்—தேசாருஞ்
சிற்பரா னந்தா திருவால வாயுறையுந்
தற்பரா சொக்கநா தா. (௯)

இறந்தும் பிறந்து மிளைத்தே னினியான்
மறந்தும் பிறவா வரந்தா—சிறந்தபுகழ்
ஞாலவா யாமுடிக்கு நாட்டுசூ ளாமணியா
மாலவாய்ச் சொக்கநா தா. (௧0)

உலக வெறுப்பு முடல்வெறுப்பு முள்ளத்
திலகு மலவெறுப்பு மெல்லா—மலகிறந்த
நந்தாத வின்பசுக நாட்டின் விருப்பமுறத்
தந்தாள்வை சொக்கநா தா. (௧௧)

---

9. Drive off the devil of desire from my heart that the ineffable realisation may spring in it, Thou effulgent joy of wisdom, transcendant One, dwelling in sacred Alasya, Sokkhanatha!

10. I have grown weary of births and deaths. Grant me the boon that I be not born again even in forgetfulness, Sokkhanatha of Alasya, the supreme gem set in the crown of the world of great fame.

11. Put in me a disgust for the world, disgust for the body and disgust for the malas that thrive in the mind, so that I may have a desire for the estate of limitless, imperishable and blissful joy, Sokkhanatha!

எப்போது மும்மலம்விட் டேறுவேன் பூரணமா
யெப்போது மின்பசுகத் தெய்துவே—னெப்போது
நித்தியா சுத்தா நிராமயா சொற்றவறாச்
சத்தியா சொக்கநா தா. (கஉ)

காயமோ காலன் கருத்தோ மகாகாலன்
ஞாயமோ சற்று நடப்பதில்லை—பேயனேன்
மாளுவனோ தென்மதுரை மாமணியே யென்னையுகந்
தாளுவையோ சொக்கநா தா. (கங)

எரிசுடுவ தல்லா லிரும்பு சுடுமோ
வரியயற்கும் வாசவற்கு மியார்க்கும்—பெரியவர்க்கும்
பூணுமே *தத்தொழிலின் பொன்னருளாற் றென்மதுரைத்
தாணுவே சொக்கநா தா. (கச)

*தத்—அந்த.

---

12. When shall I get ashore from the three malas? When, when, shall I get in perfection Thy blissful joy, eternal, pure, taintless, truthful One of unfailing words, Sokkhanatha?

13. Neither the body, nor the will of Death, nor the judgment of Mahakala can ever prevail against Thee. Shall I, satanic, perish, or wilt Thou save me in love, O jewel of beautiful Madura?

14. It is the heat that scaldeth, not the iron; is it not? Is it not through Thy sweet grace that the allotted work devolveth on Hari, Aja, Indra and the great ones, O eternal Sokkhanatha of charming Madura?

ஆரிடத்தில் வந்து மடியே னுளத்திருந்து
மோரிடத்தி லுற்பவித்து முள்ளபடி—பாரிடத்தி
னையே னுளமகிழ நன்றா வுணர்த்திடுவாய்
தாயேநீ சொக்கநா தா. (கரு)

ஆரிடம—பெரியோர். ஓரிடம்—சிவலிங்கம்.

நித்த மெழுந்தருளி நின்மலனே யென்றனக்குப்
புத்திமிக மிகவும் போதித்துச்—சித்தமயல்
போக்குவா யின்பசுக பூரணத்தி ரண்டறவே
யாக்குவாய் சொக்கநா தா. (கசு)

மறையா கமவிதியும் வந்தவுட றன்னி
னிறையூழ் விதியுமுன்னா னின்றான்—மறைவிதிக்கே
யேற்கவே செய்வே னிசைந்தாலூழ் வேறதனோ
யார்க்காவென் சொக்கநா தா. (கஎ)

---

15. Entering the great ones, abiding in Thy servant's heart, manifesting Thyself in the symbol of Lingam, reveal Thou well the truth unto me on this earth, so that I may feel the bliss in my heart, O mother, Sokkhanatha!

16. Come unto me day by day, O taintless One, instruct me more and more, remove the delusion of my mind; make me united, the idea of two being lost, in the perfection of blissful joy, Sokkhanatha!

17. Born with the burden of Karma about me, I merge my individuality into the sacred rules of Vedagamas and become purified from all sins of fates. I wonder, then, why and to whom fate exists, Sokkhanatha?

நலம்விளைக்கு முன்பதத்தி னாடவைப்ப தல்லான்
மலம்விளைக்குஞ் சோறருந்த வைத்தாய்—சலம்விளைக்குஞ்
சென்னியா மாமதுரைச் செல்வாவெல் லாமும்வல்ல
தன்னியா சொக்கநா தா. (க௮)

ஆர்வந்தெ னார்போயெ னையாவுன் னானந்தச்
சீருளத்தே யென்றுஞ் செறிந்திலதேற்-காரிருண்ட
கண்டனேயோர்புருடன்காதல்கொண்டாள் போன்மதுரை
யண்டனே சொக்கநா தா. (க௯)

கான்றசோ றாயுலகங் காணவில்லை யின்பவெள்ளத்
தூன்ற வடியே னுறங்கவில்லை—யேன்ற
*விருள்சகல நீங்கவில்லை யேழையேற் குன்ற
னருளுறுமோ சொக்கநா தா. (உ0)

*இருள் - கேவலம்.

---

18. Instead of making me set my desire on Thy feet that yieldeth good, Thou hast made me eat the food that yieldeth evil, Thou, from whose head the waters flow, O happy One of great Madura, bounteous Lord, all-capable Sokkhanatha!

19. Sir, what matters it whoever comes or whoever goes, if the felicity of Thy bliss fills not my heart for ever, even as the love of a woman for her beloved husband ? O dark throated One, Anda (Siva) of Madura, Sokkhanatha !

20. The world appeareth not like vomitted food ; nor do I sleep steeped in the flood of joy. The kevala and sakala states have not been crossed. Will Thy grace come unto me, wretched as I am, Sokkhanatha ?

நீயே பரமசிவ னானக்கா னின்மலனே
நாயே னுளமகிழ நன்றாகப்—பேயேன்
கருத்தடங்க நின்கருணை காட்டியின்ப வெள்ள
மருத்திடுவை சொக்கநா தா. (௨௧)

விதிமார்க்க மெப்பொழுது மேவறியே னூழின்
விதிமார்க்க மல்லாது மெய்யாங்—கதிமார்க்கங்
காட்டுவாய் நாயேன் கரையேற வெவ்வுலகு
மாட்டுவாய் சொக்கநா தா. (௨௨)

அருவருப்பே மெத்தியிடு மாகத்தைச் சற்று
மருவருக்கத் தோற்றுதில்லை யையோ—வருவருக்கத்
தோற்றியிடா தென்னவினை துய்ப்பித் தறுப்பதற்கோ
சாற்றியிடாய் சொக்கநா தா. (௨௩)

---

21. If Thou art the supreme Siva, O pure One, show me Thy grace that I may feel the joy, that my mind may be still and feed me with the flood of bliss, Sokkhanatha !

22. I never do know the prescribed Path. Show me, not the way of my fate, but the Path of truth that I may be saved, O Sokkhanatha who urgest every world.

23. Alas, it never doth occur to me to abhor the body which is full of abomination. What karma is there to be fed and consumed that I do not so feel to abhor, say O Sokkhanatha ?

தவமோ சிறிதறியேன் றரணிமேற் செய்யு
மவமோ வளவில்லை யானுற்—சிவமோ
பெறுமாறென் கூடற் பிரானேமுப் பாச
மறுமாறென் சொக்கநா தா. (௨௪)

அனைத்துயிர்க்கும் பாச மறுத்துமுத்தி கூட்ட
மனத்துயரஞ் செய்தன் மருந்தோ—மனத்துயரஞ்
செய்யாமற் றீர்மருந்து சித்தா வறிந்திலையோ
வையாவென் சொக்கநா தா. (௨௫)

உணர்த்தி னுணர்வே னுணர்த்தாயே னாயேன்
கணத்து முணரும்வகை காணே—னுணர்த்தியென்னுட்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா. (௨௬)

---

24. Tapas I know not even a little. There is no limit to the evil that I do on earth. How then can I get to Sivam, O Lord of Madura; how is the triple bond to be severed, Sokkhanatha?

25. Is causing pain to the minds of living things the cure that cutteth their bonds and uniteth them in bliss? Dost Thou not know, O, Siddha, a remedy that cureth without giving pain, O Sire, my Sokkhanatha?

26. If Thou enlightenest me, I understand; If not, I know not how I can understand even for a moment. Enlighten me, remove the mala, maya and karma that are in me and enslave me, in Sivanand, Sokkhanatha!

பிறிந்தேன் மலத்துனது பேரருளி னாலே
யறிந்தே னுனைநன்றா வையா—செறிந்தவின்ப
பூரணா செங்கமலப் பொற்பாதா கூடலில்வா
ழாரணா சொக்கநா தா. (௨௭)

கெடுங்காலம் வந்தாற் கெடுப்பை கதியில்
விடுங்காலம் வந்தால் விடுவை—கொடுந்தவங்கள்
பண்ணிடினும் பாவம் பயிற்றிடினு மாரேனு
மண்ணலே சொக்கநா தா. (௨௮)

என்னவினை நாயேற் கிருக்குதோ விக்காயத்
தென்னவினை நின்றா ளியற்றுமோ—வென்னவினை
வந்திடுமோ வென்றறியேன் வந்தாலு நின்னருளே
தந்திடுவாய் சொக்கநா தா. (௨௯)

---

27. I was freed from malas by Thy great grace, O Sire, and I came to know Thee well, O perfect One full of joy, with lovely feet like the red lotus, God of the Vedas that dwellest in Madura. Sokkhanatha !

28. Whether one doth practise severe asceticism or indulge in wickedness, Thou wilt ruin one when the time for ruin comes or lead one into freedom when the time for liberation comes, O Lord, Sokkhanatha !

29. Whatever karma awaiteth me, lowly as a dog, whatever karma Thy feet will make me do with this body, whatever karma will come to me, I do not know. But whatever may come, give me Thy grace, Sokkhanatha !

ஆறாறு தத்துவத்து மாணவத்துங் கன்மத்து
மாறாதெந் நாளு மயங்காமற்—பேறாக
நித்தனே நின்மலனே நின்பதத்தி லாண்மதுரை
யத்தனே சொக்கநா தா. (௩௦)

அடியே னுனைவேண்ட வப்படியே யென்றுங்
கொடியேன் கருத்திசையக் கூறி—யடியேனை
மீண்டுபிற வாதுன் விரைமலர்த்தாள் சூட்டியெனை
யாண்டவனே சொக்கநா தா. (௩௧)

ஆசா னுளத்திருந்து மான்மா வுளத்திருந்து
மாசார் மலத்தை யறுத்தருளி—நேசா
வொளித்திருந்த வின்பவெள்ள மொன்றவுயிர்க் கென்று
மளிப்பவனீ சொக்கநா தா. (௩௨)

---

30. That I may never change nor be deluded by the thirty-six tatvas, anava and karma, that I may obtain Thy bliss, make me the slave of Thy feet, O eternal taintless Lord, Sokkhanatha !

31. When I Thy wicked servant prayed to Thee, Thou didst answer my prayers always, Thou didst crown my devoted head with Thy fragrant flower-like feet lest I be born again, Thou madest me Thy servant, Sokkhanatha !

32. Dwelling in the heart of the guru, and dwelling in the heart of the soul, Thou dost sever the foul malas, O Friend, and makest the soul unite with the flood of joy that hath been remaining hidden, Sokkhanatha !

ஆற்றை யணிவேணி யமலனே மெய்யதனி
னீற்றைப் புனையு நிமலனே—கூற்றைக்
குமைத்தவனே யென்சிரத்துன் கோகனதத் தாளை
யமைத்தவனே சொக்கநா தா. (௩௩)

கால வசமோ கடியேன் வினைவசமோ
ஞாலவச மோவருளை நாடியே—கோலமறச்
சிற்பரா னந்தவெள்ளஞ் சேர்ந்திருந்துஞ் சேர்கிலேன்
றற்பரா சொக்கநா தா. (௩௪)

நீணாட் பிறந்திறந்து நின்றதுயர் நீயறிவை
வீணாட் கழித்து விடாமலே—பூணவரு
ணண்ணரிய பேரின்ப நாடி யதுவாக
வண்ணலே சொக்கநா தா. (௩௫)

---

33. O pure One, wearing the river on Thy locks, O taintless One, wearing the sacred ashes on Thy body, O Vanquisher of Death, Thou hast placed Thy golden feet on my head, Sokkhanatha!

34. Is it my misfortune, or the result of my hard-hearted actions of the past or is it even the attendant evil of this ill-fated world? I know not what. Seeking Thy grace, though I did shuffle off my mortal coil and attune my heart to a flood of joy in the vision beatific, yet I cannot reach Thee, O supreme Sokkhanatha!

35. Thou knowest my travail from births and deaths through long ages. Grant me Thy grace that I may not waste my days, but may seek after the bliss, difficult to approach, and become that bliss, O Lord, Sokkhanatha!

ஆறாறு தத்துவத்து மாணவத்துஞ் சாராமன்
மாறாத பேரின்ப வாரிதியே—பேறாகச்
சார்ந்திருக்க வல்ல சதுர ருளத்ததுவா
யார்ந்திருக்குஞ் சொக்கநா தா. (௩௬)

காடோ வனமோ கனகிரியோ காசினியோ
நாடோ சகலகலை ஞானமோ—வாடி
யொடுங்குவதோ மெய்வீ டுயிர்க்களித்தல் போத
மடங்குவதோ சொக்கநா தா. (௩௭)

துன்றுபர மானந்தச் சோதியிலி ரண்டற்று
நின்றுவிட வென்னை நிறுத்துவா—யன்று
கமலனே காண்பரிய கண்ணுதலே கூட
லமலனே சொக்கநா தா. (௩௮)

---

36. Thou abidest well always in the hearts of those clever ones that join not the thirty-six tatvas or the anava but can remain united with the unchanging ocean of bliss, Sokkhanatha !

37. Where is the true Salvation that you afford to life?
Is it the jungle or the desert,
The Mountain high or the vast expanse of earth,
The fine firmament above or the
Quintessence of Science, Arts and sacred texts below ?
Is it self-abnegation or merging the 'I' in the universal soul ?
Tell me, O Sokkhanatha !

38. Make me remain, losing the perception of two, in the radiance of supreme bliss, O brow-eyed One, whom even the lotus-eyed Vishnu could not find, pure One of Madura, Sokkhanatha !

கமலன்—also Brahma.

எக்கால மிக்காய மிற்றிடுமோ வென்வினைக
ளெக்கால மும்மலங்க ளிற்றிடுமோ—வெக்கால
மானந்த சாகரத்தி லாடிடுமோ வென்னுளந்தா
னானந்தா சொக்கநா தா. (௩௯)

எச்கால மெய்க்கே இரையிடுத லிற்றிடுமோ
வெக்கால மிக்கரண மிற்றிடுமோ—வெக்காலம்
பேசாநு பூதி பிறந்திடுமோ வென்னுளத்தி
லாசானே சொக்கநா தா. (௪0)

வாக்கிலுரை பொய்யே மனநினைப்ப தங்கவடே
யாக்கைதினஞ் செய்வ தகிர்த்தியமே—நோக்கிற்
றிரிவிதமு மிப்படிநீ செய்வித்தான் முத்தி
தருவிதமென் சொக்கநா தா. (௪௧)

---

39. When will this body drop, when my karmas, when will the three malas drop? When, when will my heart bathe in the ocean of bliss? O joyful One, Sokkhanatha!

40. When will the feeding of my body cease? When will this karma cease? When will the ineffable realisation spring in my heart? O Master Sokkhanatha!

41. The words of my mouth are false; The thoughts of my mind are deceitful; The deeds of my body from day to day are wrongful. If Thou makest me do like this in all the three ways, how art Thou going to give me liberation, Sokkanatha?

இக்காலத் தின்னவினை யென்றமைப்பை யப்படியே
யக்காலத் தவ்வூ ழருத்திவை—யிக்காலந்
தப்புவா ருண்டோ தமியேற்குந் தப்பரிதென்
னப்பனே சொக்கநா தா. (சஉ)

மோகாபி மானமின்னு முற்று மறக்கவில்லை
தேகாபி மானஞ் சிதையவில்லை—யோகோ
வுனையடைந்தும் பாச மொழியவில்லை கூட
றனையடைந்த சொக்கநா தா. (சங)

பத்திமெத்தச் சித்தம் பதியவில்லை யட்டமா
சித்தி யவாவெறுக்கச் செய்யவில்லை—முத்தியுளங்
கூடவில்லை யெந்நாளுங் கூடலிலே மாறிநட
மாடவல்ல சொக்கநா தா. (சச)

---

42. Thou arrangest that such deed shall happen at such time; Thou feedest such deed at the proper time accordingly. Can any one escape that time? I cannot escape, O my Father, Sokkhanatha!

43. The conceit born of delusion hath not been fully forgotten. The attachment to the body hath not been destroyed. Alas, even after union with Thee the bond hath not broken, O Sokkhanatha that resideth in Madura!

44. The mind yearneth not for devotion. The desire for the eight-fold siddhis hath not yet gone. The heart panteth not for liberation, O Lord that ever dancest in Madura with changed steps!

என்னைவளை பாசவர ணின்னமுநீ கொள்ளவில்லை
யன்னையனே *நீபதண மானாலு—முன்னைமல
மோடவே யெவ்வுயிர்க்கு மோட்டு மருட்சேனை
†தாடியிடுஞ் சொக்கநா தா. (சரு)

*பதணம் - அரண். †தாடியிடல் - தாக்கல்.

சேகரத்தி னுச்சியின்மேற் செந்தேனுக் கிச்சித்தே
போகவச மாகுமோ போகாதார்—தாக
மிகவறவே யுள்ளத்தில் வேண்டினுன்றாட் செந்தே
னகமுறுமோ சொக்கநா தா. (சசு)

அடியார் பரிபாக மெல்லா மறிந்து
படி‡கீழ்ப் பதமேற் பதத்திற்—கொடுபோ
யிருத்திடுவை ||சேர வினுமேலாம் போக
மருத்திடுவை சொக்கநா தா. (சஎ)

‡கீழ்ப்பர மேற்பரமென்றும் பாடம். ||சேர்தலினுமேலாயவென்றும் பாடம்.

---

45. Thou hast not taken the fortification of the Pasa that encircleth me, O God like unto a mother! Even if Thou becomest a fortification Thyself, the army of Thy grace will charge and drive off the ancient malas from the souls, Sokkhanatha !

46. Will the honey on the summit of the hill be his who striveth for it or will it come to quench the thirst of him who doth not go seeking for it ? If one merely wisheth for the nectar of Thy feet, would it come into his heart ?

47. Thou knowest the fitness of Thy devotees and accordingly placeth them in lower or higher states or makest them enjoy the still higher state of realisation, Sokkhanatha !

*வாழைம் மலத்தால் வருந்தி மிகவுடைந்த
வேழையனுக் கையோ விரங்குவாய்—கோழையனாய்ப்
போனேன் புலப்பகையாற் பொன்னடியை நின்னருளாற்
றானேதா சொக்கநா தா. (சஅ)

*ஐம்மலம் - பஞ்சமலம்.

எக்காலந் தாகங்க ளிற்றிடுமோ காயங்க
ளெக்கால மாசைசின மிற்றிடுமோ—வெக்கால
நல்லார் குணம்வருமோ நாதாவெல் லாமுமா
யல்லானே சொக்கநா தா. (சகூ)

உள்ளமுனை யல்லாலொன் றுள்ளவில்லை நின்றொளிக்குங்
கள்ளமற நீயுங் கருதவில்லை—யெள்ளளவு
நற்றவமோ செய்யவில்லை நாயே னுனையடைதற்
கற்றதென்ன சொக்கநா தா. (ருO)

---

48. Take pity on me who am crushed down by the troubles of the eternal five malas. I have grown timid and dread my enemies, the senses. Grant me Thy golden feet in Thy grace, Sokkhanatha !

49. When will the thirstings stop? When will the bodies end ? When will the likes and dislikes cease ? When will the qualities of the good be mine? O Lord, who art all things, yet none of them, joyful Sokkhanatha !

50, My heart meditateth on nothing but Thee. Thou hast not willed that my lurking roguery should go. I have not to my credit even the slightest act of good tapas. Ah, what more is wanting for me to reach Thee ? Sokkhanatha!

ஆர்க்குக் கிடைக்கு மடியேன்முன் வந்துமறைக்
கேற்கக் கருத்துக் கிசையவே—யார்க்குந்
தெரிவரியா வேதசிகை சித்தா வுரைத்தா
யரியறியாச் சொக்கநா தா. (௫௧)

எவ்வினையை மாக்கள்பயி ரிட்டார்க ளிட்டவரே
யவ்வினையின் போக மருந்துதல்போற்—செவ்விதாய்த்
துன்மார்க்கஞ் செய்வார்க்குத் தோன்றும் பிறப்புமுத்தி
சன்மார்க்கஞ் சொக்கநா தா. (௫௨)

எல்லார் கருத்து மிதமா யுரைக்கறியே
னல்லாங்கு தீங்கிதெனை நாடறியே—னொல்லாரு
நீரூரும் வேணி நிமலா மதுரையில்வா
ழாரூரா சொக்கநா தா. (௫௩)

---

51. Who could be so fortunate? O Siddha, Thou came before me and taught me the crown of the Vedic teachings in a way that my mind could grasp it, the Vedas which even Hari could not understand, Sokkhanatha !

52. Whatever seed men have sown, the harvest thereof the very men shall reap. Even so, Sokkhanatha, the wicked would be taking births, while the good attain liberation.

53. I know not how to please all hearts. I cannot choose between right and wrong ; O taintless One with shining locks from which the waters flow, O God of Arur that hath Thy abode in Madura, Sokkhanatha !

உரையிறந்த பேரின்ப வுல்லாச வீட்டிற்
றிரையிறந்து தூங்கித் திளையேன்—வரைபெருகப்
பேசுவேன் யானென்றே பெற்றவர்தம் முள்ளத்துக்
காசுவே சொக்கநா தா. (௫௪)

ஆறாறு தத்துவமு மத்திலுறை மூர்த்திகளும்
பேறாம் வினையினையும் பெந்தித்து—மாறாம
லாட்டுவது நீயானா லாகா மியமெம்பாற்
சாட்டுவதென் சொக்கநா தா. (௫௫)

முன்னாளின் மாக்களுக்கு முத்தி கொடுத்தவரு
ளென்னாளிற் சும்மா விருப்பதேன்—முன்னாளிற்
சீர்பெற்றா ரேனுன் றிருவருளொத் தாசையன்றி
யார்பெற்றார் சொக்கநா தா. (௫௬)

---

54. I enjoy not the sleep with the screen rent asunder in the happy home of bliss beyond expression. I talk of myself in heaps that grow like mountains, O armour for the hearts of those that have attained Thee, Sokkhanatha !

55. O Sokkhanatha ! When you unerringly guide the tatvas thirty-six and the presiding deities thereof, as also karma and its effects, what effect can action yet to come have on me ?

56. O Sokkhanatha ! Why should Thy grace that bestowed salvation to many a soul in days of yore, deny it to me ? The great attained immense fame only through Thy benediction. Are there any that became great without Thy grace ?

நோயால் வருந்தியுனை நூறுகுரற் கூப்பிட்டா
னீயாரெ னாதிருக்கை நீதியோ—தாயா
யலைகொடுத்த கேழ லருங்குழவிக் கன்று
முலைகொடுத்தாய் நீயலவோ முன். (௫௭)

தாயர் மகவருத்தஞ் சற்றுந் தரியார்க
ளாயவினைக் கீடா யமைத்தாலுங்—காயம்
பரிக்குந் துயரமெல்லாம் பார்க்கவுனக் கென்றுந்
தரிக்குமோ சொக்கநா தா. (௫௮)

தீவினையா லின்னமின்னந் தேகமுறச் செய்வையோ
தீவினையற் றுன்மயமாய்ச் செய்வையோ—தாவிதமா
யின்னபடி மேல்விளைவ தென்றறியே னீதறிந்த
வன்னையே சொக்கநா தா. (௫௯)

---

57. I cry unto Thee a hundred times tormented by the ills of life; is it just that Thou shouldst remain even without inquiring who I am? Art Thou not the One who came in the past like a mother and suckled the suffering litter of the boar?

58. Mothers can never bear to see the sufferings of their childern. Though one is placed in accordance with one's karma, wouldst Thou ever bear to see the sufferings borne by one's body, Sokkhanatha?

59. Wouldst Thou make me incarnate further and further through wicked karma? Or wouldst Thou change me into Thy form with the loss of wicked karma? I know not what would certainly happen, Thou knowest this, O mother Sokkhanatha!

என்னதியா னென்பதுவு மியான்பிறர்செய் தாரெனலு
மன்னுமதி பாதகமேல் வாஞ்சைகளு—மின்னமின்னஞ்
சொல்லுகின்ற விச்செயனீ தூண்டுதலற் றென்செயலா
லல்லவே சொக்கநா தா. (௬0)

ஆலந் தரித்தலிங்க மாலவாய்ச் சொக்கலிங்க
மூலமா யெங்கு முளைத்தலிங்கம்—பாலொளியா
மத்தனே கூடன் மதுரா புரியுமையா
*ளத்தனே யாலவா யா. (௬௧)

*அத்தன்—அர்த்தன் என்பதன் மரூஉ; ஓர் பாகத்தன்.

எல்லா முனதுபத மெல்லா முனதுசெய
லெல்லா முனதருளே யென்றிருந்தாற்—பொல்லாத
மாதுயர நீங்கு மருவு முனதடிக்கே
யாதரவாய்ச் சொக்கநா தா. (௬௨)

---

60. To speak of mine and I, to blame that others did such things, the heinous offences and desires that continue, such acts as these are, are not my work but are through Thy urging, O Sokkhanatha!

61. O Lingam, that weareth the venom, Sokkhalingam of Alasya, Lingam that springeth everywhere as the cause, Father, of milk-white lustre, who shareth Thy form with Uma of Kudal, God of Madura!

62. If it is considered that everything is of Thy beatitude, everything is of Thy doing and everything is of Thy grace, then the great and painful sorrow will leave and there will be a loving yearning for Thy feet, Sokkhanatha!

தீதா மவாநந்தச் செய்மதுரை வாழ்வேந்தா
நாதாசி வாநந்த நல்குவாய்—வேதச்
சிரகரா நித்தா நிரபரா சுத்தா
வரகரா சொக்கநா தா. (௬௩)

மற்றொருவர் தஞ்சமின்றி வந்தடைந்தக் காலெனைநீ
சற்றுமிரங் காதிருக்கை தன்மையோ—கொற்றவா
பாவலா கூடற் பரமா பரதேசி
காவலனீ தானெனக் கால். (௬௪)

தன்னந் தனியே தமியேன் முறையிட்டா
லின்னந் திருச்செவியி லேறாதோ—மன்னவனே
தென்மதுரை மேவித் திருந்தியசெங் கோல்செலுத்துந்
தன்மதுரை நீயலவோ தான். (௬௫)

---

63. Hara Hara, Sokkhanatha! O King of Madura, that consumed the evil desires in me! O Lord, the incarnation of all the eminent truths of the Upanishads eternal! O Hara, Lord Siva the destroyer! the everlasting and pure, bestow on me the supreme felicity.

64. When I come to Thee for shelter having no other refuge, is it noble that Thou takest not the slightest pity on me, though Thou art the protector of the helpless, O Sovereign, Poet, Supreme God of Madura!

65. When I, the forlorn, cry out to Thee all alone, do not my cries reach Thine ears still? O king, art Thou not the Lord of dharma that holdest a righteous sceptre in charming Madura?

என்போன் மலகடின ரெவ்விடத்துங் கண்டதுண்டோ
வின்பே மதுரைக் கிறைவனே—யன்பேது
மில்லா தெனையாண்ட வெண்ணத்தாற் றேவரீ
ரெல்லாமும் வல்லசித்த ரே. (௬௬)

நீயே யொளித்திருப்பை நீயென்றுங் காணும
னீயே யொளித்தபடி நின்னருளா—னீயேதான்
காட்ட வனனியமாக் கண்டே னுனதுவிளை
யாட்டதென்ன சொக்கநா தா. (௬௭)

பேரன்ப னல்லன் பிழைசெய்யான் றானல்ல
னோரன்பு மில்லா வுலுத்தனேன்—பேரன்பு
காட்டியெனைக் காட்டியுனைக் காட்டியின்பத் தொட்டிலிலே
யாட்டிவளர் சொக்கநா தா. (௬௮)

---

66. Hast Thou ever seen anyone hardened with malas like me anywhere? O sweet One, Lord of Madura! Yes, Thou art really a siddha capable of doing everything; for Thou hast made me Thy servant, me, who am without any love.

67. Thou residest hidden and ever unseen. When Thou didst reveal Thyself in Thy grace, I saw Thee not as separate from me. What prank of Thine is this? O Sokkhanatha!

68. My love is not great. Nor am I without faults. I am a covetous creature having no love in me. Show me Thy great love, show me myself, show me Thyself and nurture me in the cradle of joy, Sokkhanatha!

இட்டா சனத்தி லிரவுபக லற்றிடத்தின்
முட்டா திருக்கவருண் முற்றுந்தா—வட்டாங்க
யோகந்தா னீங்கி யொழியாச் சிவானந்த
வாகந்தா சொக்கநா தா. (௬௯)

மோகங் கரைய முழுது மலங்கரைய
வாகங் கரையவறி வானந்த—மேகமாய்ப்
பூரணமா யெங்கெங்கும் பொங்கி யெழவிழித்த
வாரணனே சொக்கநா தா. (௭௦)

ஊனாது வானவுட லோடுமணு காமலரு
ளானசிவ போகமது வாயருள்வாய்—ஞானக்
கரும்பொருளே வாழ்மதுரைக் கண்ணுதலே யார்க்கு
மரும்பொருளே சொக்கநா தா. (௭௧)

---

69. Enable me to sit in posture desirable, and dwell at rest in the place where *Night and Day prevail not, and free from the trance of the eight forms of ‡yoga; O Sokkhanatha! grant me the body of bliss eternal!

*Night and day-the Kevala and Sakala states of the soul.
‡Yoga consists of eight forms of discipline.

70. Thou hast opened Thy eyes and lo! the delusion has melted away, the malas have melted entirely, the body has melted away and the joy of wisdom has bubbled up everywhere, O Revealer of Vedas, Sokkhanatha!

71. Grant that I may not unite with the body made of flesh but that I may become united with Sivabhoga which is Thy grace, O great being of wisdom, brow-eyed god of Madura, precious to every one, Sokkhanatha!

பூண்டமல மாண்டுவிடப் போந்தசிவா னந்தவெள்ளத்
தாண்டுமெனை மீண்டுவிட லாகுமோ—நீண்டமால்
*வீரென்பார் தாரா விமலா வெனைக்கண்டா
ராரென்பார் சொக்கநா தா. (எஉ)

*வீரம்-வீரெனக் குறைந்தது.

முன்னை மலமகற்றி மூதறிவா னந்தமயந்
தன்னையறிந்த தபோதனரு—ளென்னையுநீ
யாண்*டுபரிச் சொக்கநா தாந்தமருள் கூடலிலே
தாண்டுபரிச் சொக்கநா தா. (எங)

*உபரி—உயர்வு.

கருணா நிதியே கடவுளே யன்பர்
பொருளான பேரின்பப் பொற்பே—யொருநாளு
நீங்கா தெனதறிவி னின்றசுகா னந்தமே
யாங்காணீ சொக்கநா தா. (எச)

72. O Sokkhanatha the immaculate!

Thou that wearest the wreaths of hard bones of *Trivikrama

Hast cut off all my earthly bonds and made me happy.

And yet if Thou leadest me to bewilderment

To whom will the seers take me?

*Trivikrama-Vishnu as one who grew to great height and measured the worlds in three strides.

73. Make me a servant among the sages who, having thrown away the ancient mala, have experienced the joy of ripe wisdom and bestow on me the high and pure nadantha, O Sokkhanatha, that rideth on the prancing steed in Madura.

74. O treasure house of love, God, wealth of Thy devotees, charm of supreme bliss, O blissful joy that abideth, never separating, in mine intelligence; lo, Thou art I Sokkhanatha!

நீரிலே மூழ்கிலுமெ னித்தமருச் சிக்கிலுமென்
பாரிலே சுற்றிப் பணியிலுமென்—வேரிலே
யுற்றிருந்தா லன்றோ வுயிர்க்குறுதி யொன்றிரண்டு
மற்றவனே சொக்கநா தா. (௭௫)

என்செயலே யென்றென் றியற்றுவது மென்செயலு
முன்செயலே யென்றென் றுணர்த்துவது—நின்செயல
தாருமே யென்ன வடியேற் குணர்த்தலுநீ
யாருமே சொக்கநா தா. (௭௬)

ஈண்டுமெனை யாண்டிலையே லென்வினைக்கீ டாயானே
வேண்டும் பவங்களினீ விட்டாலும்—பூண்டருளா
லங்கங்கே யென்னோ டனியமா யென்னுருவிற்
றங்கியருள் சொக்கநா தா. (௭௭)

---

75. Of what avail is it to bathe in the sacred waters? Of what avail is it to perform the puja daily? Of what avail is it to go round the world in pilgrimage? The good of the soul lieth in abiding steadfastly at the Root, doth it not? O Sokkhanatha, who art neither one nor two.

76. O Sokkhanatha! What I do as my own act
Thou showest that it is all Thine;
None else but Thou can illumine the soul.

None is there save Thee, who can know Thee?

77. If Thou dost not make me Thy servant even now, but leave me to take my births according to my deeds, Lord, dwell graciously within me, inseparably, whatever form I take.

உன்னைவிட நீங்குமுயி ரொன்றில்லை யாதலினா
லென்னைவிட நீங்குவது மில்லைநீ—பொன்னைவிடப்
பூந்தே னலருடையாய் பொங்குமது ராபுரியில்
வேந்தே பிரியா விடை. (எஅ)

அன்பர்க் கருள்புரிவ தல்லாமற் றேவரீர்
வன்பர்க் கருள்புரிய மாட்டீரே—னும்பர்தொழு
நல்லார் புகழ்மதுரை நாதரே தேவரீர்க்
கெல்லாமும் வல்லசித்த ரேன். (எகூ)

நரக மினிநாட நாடோ முமையாள்
விரகர் தமிழ்மதுரை மேவித்—துரகநரி
யாக்கினார் வைகையினீ ராடினோ மவ்வெல்லைப்
போக்கலாம் யாந்திரிந்திப் போது. (அ0)

---

78. Oh King of flourishing Madura,
That wearest the golden-hued garland of flowers,
Overflowing with sweet honey ! Thou art my life
Thou never gettest away from me;
Ours is an inseparable union.

79. If Thou, O God, wouldst only bless those that love Thee and not those that are wicked, why art Thou called the Siddha who could do everything? O Lord of Madura, praised by the great souls whom even the Gods revere!

80. We no longer desire the path to hell; we have bathed in the Vaigai of Uma's Lord, who having come to Madura of Tamil fame changed the horses into jackals. Now we can pass beyond the bounds of hell.

நானோ தனுகரண நானோ மலமாயை
நானோ வினைக ளடத்துவது—நானோதான்
பூண்ட வினையறுப்போன் புண்ணியபா வம்புரிவோ
னுண்டவனே சொக்கநா தா. (அக)

அரும்பாச நன்மைதின்மை யாக மதன்மேல்
விரும்பாது நிட்டையிலே மேவித்—திரும்பாத
மானந்தா வென்னறிவின் மாறாது பொங்கியெழு
மானந்தா சொக்கநா தா. (அஉ)

துஞ்சப் பிணமென்னச் சுற்றத்தா ரிட்டத்தா
ரஞ்சச் சலிக்க வருவருக்கக்—கொஞ்சமுற
வந்த தனுவிருந்து வாழ்ந்துநா னென்னவைத்த
தந்திரமென் சொக்கநா தா. (அங)

---

81. Am I the body and the karnas, am I the malas and the maya? Am I one who urges these, severs the karma? Am I the person who does the good and evil deeds? O Lord, Sokkhanatha!

82. O Sokkhanatha—the ever increasing bliss of my intellect!
Dissociate me from all the cruel bonds of the material body and its acts good and bad.
Give me endless joy by wrapping me
In communion with Thee!

83. O Sokkhanatha! What is the corpse worth
When the soul passes out of this body?
It is something to be dreaded against and detested,
Nay—deemed base by friends and kindreds.
What is the magic of Thy art
That residing, as I do, in this transient body
I feel that everything about me is mine?

தனுவாதி யாக்கியுயிர் தன்னிலிசைத் தாட்டி
யெனுமாக மங்கருணை யென்றுந்—தினமுநீ
யாச்சரியம் யானெனதென் றிட்டன்மறந் தொன்றுரைத்த
லாச்சரியஞ் சொக்கநா தா. (௮௪)

தேகாதி யெல்லாஞ் சடம்பிணம்பொ யென்றிருக்க
மோகாதி யெல்லா முடிந்திருக்க—வேகமா
யெப்போது மின்பவெள்ளத் தேயிருக்க வாழ்வையென்னு
ளப்போதே சொக்கநா தா. (௮௫)

நின்பாட லென்று நினைப்பாட லன்றியே
யென்பாட லெங்கே யிறைவனே—நின்பாட
லாமே தனுவாதி யாகமநால் வாக்காதி
யாமேநீ சொக்கநா தா. (௮௬)

---

84. O Sokkhanatha ! Agamas say that
Thou art the creator of this body,
Where Thou hast infused life
And hath made it act at Thy sweet will ;
But, how strange!
That I should forget this beneficence and supremacy
Over the two forces the 'I,' and 'My' in me
And talk of something as if they are different from Thee.

85. The moment when the body and such things are considered insentient, dead and false, when the delusion and such things are at an end, when I dwell for ever in singleness in the flood of joy, that moment Thou takest Thy happy abode in me, Sokkhanatha!

86. Sokkhanatha! I sing Thy praises in songs
Dedicated unto Thee. My songs?
Indeed, Thine are mine. Thou art
The body and its train, the Agamas and the *Vacs four.

*Vacs-Sounds the evolutes of matter from the pure Maya.

நீயியற்ற வோர்பொருளை நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப் புரிகுவே—னீயியற்ற
லாக்கா தணுவு மசையுமோ வவ்விகற்பந்
தாக்காத சொக்கநா தா. (௮௭)

அன்றுமுத லின்றளவு மேனு மடியேனுக்
கென்றுநீ நன்மைசெய்வ தன்றிநா—னென்றேனுஞ்
செய்யுமா றெங்ஙன் சிவனே யினிநாயே
னுய்யுமா றெங்ங னுரை. (௮௮)

அறிவுபர மானந்த மாகவில்லை யாகம்
பொறிகரணம் யானெனதும் போக—நெறிதவஞ்சேர்
பேரன்போ வில்லை பினைநா னுனக்கடிமைக்
காரென்பேன் சொக்கநா தா. (௮௯)

---

87. Thou doth pre-ordain everything. But the dog of me acts with deliberate thought. Nothing moves without Thee. In creating many a phenomenon in this world, O Sokkhanatha! Thou art unchanged.

88. From that day to this, and even in days to come it is only Thou that art doing good to Thy servant. How can I be of any service to Thee O Siva? say, how can I be saved?

89. My intelligence hath not become supreme joy. Body, senses , karanas, I and mine, these have not perished. There is not that great love that leadeth me to austere ways. In what manner, then. can I call myself Thy servant? O Sokkhanatha!

நின்னளவி லானந்த நின்கருணை சற்றேனு
மென்னளவிற் றோற்றா திருந்தக்கா—லின்னளவிற்
பூரணம்பொய் யானந்தம் பொய்கருணை பொய்யுரைத்த
வாரணம்பொய் சொக்கநா தா. (௯0)

தேவே மதுரைநகர்ச் சிற்பரனே யெவ்வுயிர்க்குங்
கோவே யெனையாளுங் கோவேயென்—னாவே
யுனைத்துதிக்கச் சிந்தை யுனைநினைக்க வென்றுங்
கனத்தி னுனைவணங்கக் *காண். (௯௧)

* காண என்றது செய்யென்ற முன்னிலை வினைமுற்று.

உன்னைச்சிங் காரித் துனதழகு பாராம
லென்னைச்சிங் காரித் திடர்ப்பட்டேன்—பொன்னை
யரிவையரை யேநினையு மன்பிலேற் குன்றா
டருவையோ சொக்கநா தா. (௯௨)

---

90. If Thy limitless joy and Thy loving grace do not exist for me, Thy limitless perfect joy is false, Thy grace is false and what the Vedas say is also false.

91. O God of Madura, beyond all knowledge; Lord of all life, my sovereign! Make that my tongue praiseth Thee, my mind meditateth on Thee and that I worship Thee in solemnity.

92. Not adorning Thee and looking at Thy charms, I have adorned myself and got into distress. Wilt Thou bestow Thy feet on me, who am without love and who think only of women and wealth?

சொக்கநா தாவுனையே சொல்லுமடி யேனுடைய
பக்கமாய் நின்றுவினை பாற்றியே—யெக்காலு
மீண்டுவா ராதகதி மேவுவிப்பாய் தென்மதுரைத்
தாண்டவனே சொக்கநா தா. (௯௩)

ஆறுதலை யில்லை யடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காரு மில்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் றாளே துணை. (௯௪)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

---

93. Sokkhanatha, stand by the side of Thy servant that calleth on Thee alone. Put my actions to flight. Lead me into that path wherefrom there is never a retuın ; O Sokkhanatha that danceth in beautiful Madura !

94. Comfort there is none. Few there are who in loving kindness would console Thy servant. There is no other help for me. O Siva, a'raid of blame to Thyself through mishap to Thy devotees, Sokkhanatha, Thy feet alone are my refuge.

THE END.

உ

# சொக்கநாத வெண்பா

புண்டரிகத் தானைப் புகழ்ந்து *புகழ்ந்துதின
மண்டமரர் †கொண்டிறைஞ்சு மாதியே—தொண்டுபடு
நாயேனை யாண்டுகந்து நன்னெறிகள் காட்டுவித்த
தாயேநீ சொக்கநா தா. (௯௫)

* தினந்தினமு. † கோனிறைஞ்சு மாதியாய் எனவும் பாடம்.

மிண்டுசெய்யு மும்மலமு மிக்கவினை நல்குரவும்
பண்டுபோ லென்னைவந்து பற்றுமற்—கொண்டுபோய்
நின்னருளிற் சேர்க்க நினைகண்டாய் தென்மதுரை
மன்னவனே சொக்கநா தா. (௯௬)

கூரியவெம் பாசக் குளிர்நீங்க நின்னருளாஞ்
சூரியனைப் போதுவந்து தோன்றுமோ—பாரறியக்
கொட்டமிட்ட சண்டனுயிர் கொள்ளையிட்ட மாமதுரை
யிட்டமிட்ட சொக்கநா தா. (௯௭)

உனக்குப் பணிசெய்ய வுன்றனையெந் நாளு
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்கின்ற தென்மதுரை நின்மலனே யெவ்வுலகு
மாக்கின்ற சொக்கநா தா. (௯௮)

சன்மார்க்கஞ் செய்யுந் தபோதனரோ டென்னையுநீ
நன்மார்க்கஞ் செய்யவரு ணாடுமோ—துன்மார்க்கஞ்
செய்கின்ற முப்புரத்தைத் தீயாக்கித் தென்மதுரை
வைகின்ற சொக்கநா தா. (௯௯)

*வந்த பொருளாசை மண்ணாசை பெண்ணாசை*
*யிந்தவகை யாசையெல்லா மென்மனத்தின்—வந்துமினிச்*
*சேராமல் வாழ நினைகண்டாய் தென்கூடற்*
*போராத சொக்கநா தா.* (௰)

*தண்டுவருங் குண்டுவருந் தானைவரு மானைவரும்*
*வண்டில்வரு மாடுவரு மாடுவரும்—மிண்டிப்*
*பெருங்கோட்டை யுஞ்சுமையும் பின்புவருங் கூடல்*
*அருங்கோட்டை வாசலிற்சென் றால்.* (௰௧)

சொக்கநாத வெண்பா முற்றும்

இவ்வேழு செய்யுட்களும்
திருவாளர் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.,
Editor, Tamil Lexicon, Madras, தங்கள்
திருமாளிகைச் சுவடியிலிருந்து பிரதி
செய்து அனுப்பியவை.

(ப. அ. மு.)